வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 20.03.2024 புதன்கிழமை | இதழ் : 80 | பக்கங்கள் : 12

# வடக்கில் வெப்பநிலை செப்ரெம்பர் வரை உச்சம்!

- யாழில் தரைக்கீழ் நீர் சடுதியாகக் குறைவு
- தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்
- 21 - 24இற்குள் வெப்பசலன மழை கிடைக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை வெப்பநிலை உயர்வாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தரைக்கீழ் நீரின் அளவு சடுதியாகக் குறைவடைந்து செல்கிறது. செப்ரெம்பர் மாதத்தின் பின்னரே தரைக்கீழ் நீரை மீள்நிரப் பக்கூடிய கனமழை கிடைக்க வாய்ப்பு உண்டு.

எனவே, தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் - தேவையற்ற தண்ணீர் விரயத்தை முற்றிலும் நிறுத்த வேண்டும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் ஏப்ரல், மே,

11

## வெடுக்குநாறிமலையில் கைதானவர்கள் விடுதலை!

வவுனியா, மார்ச் 20

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைதான எண்மரும் நேற்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினமான கடந்த 8ஆம் திகதி பூசை வழிபாடுகளில் ஈடுபட்ட ஆலயத்தின் பூசகர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த நிலையில், இந்த வழக்கு

11

## வெடுக்குநாறிமலை விவகாரம்: விசாரணை கோரும் சஜித்

கொழும்பு, மார்ச் 20

வவுனியா, வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று, வழிபாட்டு நிகழ்வுகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதுடன், கைது நடவடிக்கைகள் இடம்பெற்றமை தொடர்பில், தாம் கவலையடைவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது குறித்து விரிவான விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

11



## வெடுக்குநாறிமலை அடக்குமுறை; யாழ். பல்கலையில் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 20

வெடுக்குநாறிமலையில் பொலிஸாரின் அடக்குமுறைகளை கண்டித்தும் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் யாழ்.

11

## வெடுக்குநாறிமலை விவகாரம்: பாராளுமன்றத்துக்குள் நேற்று தமிழ் எம்.பிக்கள் போராட்டம்!

கொழும்பு, மார்ச் 20

மஹா சிவராத்திரி அன்று வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சமய அனுஷ்டானத்தில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் எம்.பி.க்கள் சபையில் போராட்டம் நடத்தியதையடுத்து பாராளுமன்றத்தில் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 8 பேரையும் விடுவிக்க வேண்டும் என்றும்

11

## 'கோப்' குழுவிலிருந்து 7 எம். பிக்கள் விலகல்!

கொழும்பு, மார்ச் 20

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவிலிருந்து (கோப்) 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகினர்.

கோப் குழுவின் புதிய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் தமது பதவி யைத் துறந்தனர்.

11

## ரூ.300இற்கு குறைந்தது டொலரின் பெறுமதி!

கொழும்பு, மார்ச் 20

டொலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு 300இற்கும் கீழ் குறைந்துள்ளது. 2023 ஜூலையின் அதாவது, கடந்த 9 மாதங்களில் ரூபாயின் மதிப்பு இந்தளவுக்கு உயர்ந்தது இதுவே முதல் தடவையாகும்.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாளாந்த நாணய மாற்றுவீத அட்டவணையின்

11

## மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டமைக்கு சுமந்திரன் எம். பி. பொறுப்புக்கூற வேண்டும்!

நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, மார்ச் 20

மாகாண சபைத் தேர்தல் முறைமை திருத்த விவகாரத்தில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எம். ஏ. சுமந்திரன் கடும் அழுத்தம் பிரயோகித்தார். மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டு மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளமைக்கு எம். ஏ. சுமந்திரன் பொறுப்புக் கூற வேண்டும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர் தெரிவித்தவை வருமாறு,

பாராளுமன்ற உறுப்பினர்

11

## தமிழ்த் தேசிய கட்சிகளின் எம்.பிக்களை இன்று நேரில் சந்திக்கின்றார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 20

வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்களை இன்று புதன்கிழமை முற்பகல் 11:30 மணிக்கு பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள தமது அலுவலகத்தில் சந்தித்துப் பேசுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பில் நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது.

இந்த விவகாரத்தை ஒட்டிய விடயங்களை ஜனாதிபதி தரப்புடன் கையாளும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு இந்த நேர ஒதுக்கீடு குறித்து அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நேற்று முன்தினம் மாலை இந்தச் சந்திப்பை நடத்துவதற்கு நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. இந்தச்

11

## இந்திய மீனவர் அத்துமீறலை எதிர்த்து யாழில் உணவு தவிர்ப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 20

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ்.மாவட்ட மீனவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

யாழ். மாவட்ட கிராமிய கடற்தொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ்.மாவட்ட கடற்தொழில் கூட்டுறவுச்

11



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் நடைபெற்ற பொலிஸாரின் அடாவடித்தனம் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை பேசுவதற்கு தமிழ்க் கட்சிகள் விடுத்த கோரிக்கையை உடனடியாக ஏற்றுக்கொள்ள ஜனாதிபதி தரப்பில் விருப்பம் தெரிவிக்கப்படவில்லை என்பதோடு இன்று சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கியிருக்கிறார் ஜனாதிபதி.

இனப்பிரச்னை தொடர்பாக அதாவது, அவரின் பாஷையில் சொல்வதனால் வடக்கு பிரச்னைகள் என்று அவர் குறிப்பிடும் விவகாரம் தொடர்பாகப் பேச்சுக்கு அழைக்கின்றபோது எதுவித முன் அறிவிப்பும் இன்றி மறுதினம் வாருங்கள் என்று அழைப்பு விடுக்கும் ஜனாதிபதி, தமிழ் மக்கள் கொதிப்படைந்திருக்கும் ஒரு விவகாரம் தொடர்பாகப் பேசுவதற்கு அவகாசம் கேட்டிருக்கிறார்.

இந்த மெத்தனப்போக்கை கவனத்தில் கொள்ளாமல் நமது தலைவர்கள் அவரை இன்று சந்திப்பார்களா என்பது தெரியவில்லை. பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதிக்கான தேர்தலில் அவருக்கு ஆதரவாக பகிரங்கமாக வாக்களித்தவர் சி. வி. விக்னேஸ்வரன். அவரின் ஏற்பாட்டிலேயே இந்தச் சந்திப்பு முயற்சி பற்றி தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவரை சந்திக்க இருந்த மற்றைய எம்.பிக்களிலும் ஆறு பேர் இந்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நடந்த தேர்தலில் கட்சியின் கட்டுப்பாட்டையும் மீறி அவருக்கு வாக்களித்தவர்கள். இப்படி அவருக்கு நெருக்கமானவர்களை சந்தித்து அவர்களின் அரசியலுக்கு 'உதவி செய்யக்' கூட அவர் விரும்பவில்லை என்பதைத்தான் இந்த சம்பவம் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றது.

இன்னும் சில மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை சந்திக்கவிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'மலைபோல' நம்பியிருப்பது சிறுபான்மையினர் வாக்குகளைத்தான் என்பதும் ஒன்றும் இரகசியமானது அல்ல. அப்படியிருந்தபோதிலும், அவர்களின் பிரச்னை ஒன்றைத் தீர்த்துவைக்க அவர் காட்டும் அக்கறை நமக்கு பல செய்திகளைச் சொல்லியிருக்கின்றது.

ஜனாதிபதி தம்மைச் சந்திக்காத போதிலும், பாராளுமன்றத்தில் நமது எம்.பிக்கள் நேற்று சபா மண்டபத்தில் சுலோக அட்டைகளுடன் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அத்துடன், இந்த விவகாரத்தை நாட்டின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றனர்.

நமது எம்.பிக்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டும் என்பதற்காகத்தான் ஜனாதிபதியும் அவர்களை சந்திப்பதைத் தவிர்த்தாரா என்பது தெரியவில்லை என்கிறார் ரணிலை நன்கு தெரிந்த ஒரு மூத்த ஊடகவியலாளர்.

ஏனெனில், வெடுக்குநாறிமலையில் தமிழர்கள் சிவராத்திரியை கொண்டாடுவதற்குக் கூட ரணில் அரசு அனுமதியளிக்கவில்லை என்பதும் - அன்றைய தினம் பொலிஸாரின் அடாவடித்தனம் குறித்தும் - எண்மர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றமை குறித்தும் தெற்கு ஊடகங்கள் எதுவும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. அதனால் அரசாங்கம் இவ்வாறு 'கடும் சிங்கள கோட்பாட்டு'டன் இருக்கின்ற விடயம் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படாமலே இருந்தது. இப்போதுதான், அந்த விடயம் சிங்கள மக்கள் மத்தியில் பரவலாகக் கொண்டுபோய் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

ஆக, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது போராட்டத்தின்மூலம் ரணிலுக்கு உதவிதான் செய்திருக்கிறார்கள் என்றார் அந்த தெற்கு ஊடகர்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட எண்மர் தொடர்பான வழக்கு நேற்று வவுனியா நீதிமன்றில் நடைபெற்றபோது நமது சட்டத்தரணிகளின் வாதத் திறமையால் நீதிவான் அனைத்து சந்தேக நபர்களையும் வழக்கிலிருந்து விடுவித்திருக்கிறார்.

எண்மரையும் கைது செய்திருந்த நெடுங்கேணி பொலிஸார், அவர்கள் மீது பல்வேறு குற்றங்களில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அவற்றில் ஒன்று, தொல்பொருட்களை சேதப்படுத்தியதான குற்றச்சாட்டும் அடங்கும். இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால் அவர்களை பிணையில் விடுவிக்க வேண்டியதில்லை. ஆனாலும் நேற்றைய தினம் சந்தேகநபர்கள் மீதான குற்றப் பத்திரத்தை பொலிஸார் தாக்கல் செய்யாதமையைத் தொடர்ந்தே, எமது சட்டத்தரணிகள் தமது சமர்ப்பணத்தை முன்வைத்ததுடன், பொலிஸார் இவர்களைக் கைதுசெய்த பின்னரே குற்றங்களைத் தேடிக்கொண்டிருக்கின்றனர் என்று வாதிட்டுள்ளனர்.

இந்த வழக்கு இதற்கு முன்னர் கடந்த வாரம் நடைபெற்றபோது, குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு ஒரு வார கால அவகாசத்தை நீதிமன்றம் வழங்கியிருந்தபோதிலும், இன்றும் வழக்கில் முன்னிலையாகியிருந்த பொலிஸார், சட்டமா அதிபரின் ஆலோசனை பெறவேண்டியிருப்பதால் மேலும் அவகாசம் கோரினர்.

சட்டமா அதிபரின் ஆலோசனை பெறவேண்டியிருந்தால், அதனை கடந்த ஏழு நாட்களிலேயே பெற்று குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்திருக்க வேண்டுமே தவிர, மேலும் அவகாசம் கோருவதை ஏற்கமுடியாது என்று நமது சட்டத்தரணிகள் வாதிட்டதுடன், இதுபோன்ற வழக்கு ஒன்றில் முன்னர் மேல் நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பு ஒன்றையும் சான்றாக முன்வைத்தனர்.

இந்த நிலையில் குற்றம்சாட்டப்பட்ட அனைவரையும் இந்த வழக்கிலிருந்து விடுவிப்பதாகத் தீர்ப்பளித்த நீதிபதி பொலிஸார் குற்றச்சாட்டுக்களை சரியாகக் கண்டுபிடித்து மீண்டும் ஓர் ஆண்டுக்குள் வழக்கை தாக்கல் செய்ய விரும்பினால் அவர்களுக்கு அதற்கும் சந்தர்ப்பம் இருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டினார். குற்றஞ்சாட்டப்பட்ட ஆலய பூசகர் மற்றும் எழுவர் சார்பிலும் மூத்த சட்டத்தரணிகளான என். சிறீகாந்தா, அன்ரன் புனிதநாயகம், க. சுகாஷ் உட்பட பலர் முன்னிலையாகியிருந்தனர்.

நமது சட்டத்தரணிகள் தமது வாதத்திறமையால் நீதியை நிலைநாட்டியுள்ள அதேவேளையில், இதுபோன்ற கைது நடவடிக்கைகள் இனியும் நடக்காமல் இருக்கவேண்டும் என்பதுடன், அமைச்சர் டக்ளஸ் தெரிவித்திருந்தமைபோல அடாவடித்தனத்தில் ஈடுபட்ட பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற அவசியத்தையும் நமது தலைவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

நேற்றைய தினம் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன், தவறிழைத்த பொலிஸார் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருந்தால், இன்று ஜனாதிபதியை சந்திக்கின்றபோது அது குறித்து பேசியிருக்கலாம்.

**- ஊர்க்குருவி.**

# புதுக்குடியிருப்பில் நேற்று சர்வதேச மகளிர் தின விழா



புதுக்குடியிருப்பு, மார்ச் 20

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் சர்வதேச மகளிர் தின விழா நேற்று நடைபெற்றது.

யாழ். இந்திய துணைத் தூதரகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், முல்லைத்தீவு மாவட்ட செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், இலங்கை ஏதிலிகள் புனர்வாழ்வு நிறுவனம் என்பன இணைந்து இந்த விழாவை முன்னெடுத்தன.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறிசற்குணராசா, கௌரவ விருந்தினர்களாக இந்திய துணைத்தூதுவர் சி. சாய்முரளி முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி. குணபாலன் பேராசிரியர்கள் உயர்நிலை அதிகாரிகள் பிரதேச செயலாளர்கள் பிரதேச செயலாளர்கள் மற்றும் சாதனைப்பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டுள்ளனர்

பாரம்பரிய கலை அம்சங்களுடன் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதை தொடர்ந்து புதுக்குடியிருப்பு தொழில் முயற்சியாளர்களின் விற்பனை சந்தை திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து அதிதிகள் உரைகளும் கலை நிகழ்வுகளும் சாதனை பெண்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது. (ஐ)

# அன்னை பூபதி 36ஆவது நினைவுதினம் யாழ்ப்பாணத்தில் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

இரண்டு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தன அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று ஆரம்பமானது.

இதையொட்டி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமை பணிமனையில் அன்னைபூபதிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அன்னை பூபதி என்று அறியப்பட்ட கணபதிப்பிள்ளை பூபதி, மட்டக்களப்பை சேர்ந்தவர். இந்திய அமைதிப்படை காலத்தில் உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்து 1988 மார்ச் 19ஆம் திகதி




உண்ணாவிரத போராட்டத்தை மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர பிள்ளையார் ஆலய முன்றலில் தொடங்கினார். அவரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் ஏப்ரல் 19ஆம் திகதி அவர் உயிர்நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதாள உலக செயல்பாடுகளை ஒடுக்க 20 பொலிஸ் குழுக்கள்!

கொழும்பு, மார்ச் 20

பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக 20 விசேட பொலிஸ் குழுக்களை நிறுவுவதற்கு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

புதிதாக நிறுவப்பட்ட குறித்த குழுக்கள் தற்போது செயற்படும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படவுள்ளன.

இதன்படி ஒவ்வொரு குழுவிலும் குற்றப்பிரிவு நிலைய பொறுப்பதிகாரி ஒருவரும், 04 புலனாய்வு அதிகாரிகள், 02 விசேட அதிரடிப்படை அதிகாரிகள் உட்பட 09 அதிகாரிகள் அடங்குகின்றனர்.

கடந்த சில வாரங்களாக மேல் மற்றும் தென் மாகாணங்களில் இடம்பெற்று வரும் பாதாள உலக செயற்பாடுகளை கருத்திற் கொண்டு பொலிஸ் மா அதிபர் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சஜித்தின் கோரிக்கையை நிராகரித்தது நீதிமன்றம்!

கொழும்பு, மார்ச் 20

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்த யிலிருந்து நீக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை நீக்குமாறு கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்த கோரிக்கையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இதன்படி, குறித்த தடை உத்தரவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வரை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனுவினை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த தடை உத் தரவை பிறப்பித்திருந்தது.

இந்தநிலையில், குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இரு தரப்புகளிலிருந்து முன்வைக்கப்பட்ட வாதங்களை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் குறித்த தடை உத்தரவை நீடித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
20.03.2024 புதன்கிழமை
ඊළනාඩු
சோபகிருது வருடம், பங்குனி 07

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இராஜதந்திர சமூகம் எப்போது தமிழர் பக்கம் திரும்பும்?

தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி.) தலைவர் அநுரகுமார திஸநாயக்காவை மேற்குலக இராஜதந்திரிகள் தொடர்ந்தும் சந்தித்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக ஜப்பான் தூதுவரும் அநுரவை சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றார். ஜப்பான் போன்ற நாட்டின் தூதுவர் அநுரகுமாரவை சந்திக்க வேண்டிய அவசியமில்லை. எனினும், அவர் சந்தித்திருக்கின்றார்.

ஆனால், இவ்வாறான இராஜதந்திரிகளோ வடக்குக்கு வரும்போது மட்டும்தான் தமிழ் அரசியல்வாதிகளை சந்திக்கின்றனர். கொழும்பில் விசேடமாக தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை அவர்கள் சந்திப்பதில்லை. மாறாக, தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுக்கும்போதே நேரத்தை ஒதுக்குகின்றனர். ஆனால், ஜே. வி. பியின் நிலைமை வேறு. வெறும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் ஒரு கட்சிக்கு இத்தனை முக்கியத்துவத்தை வழங்கும் இராஜதந்திரிகள் - தமிழ்த் தேசிய அடிப்படையில் பத்துக்கும் மேற்பட்ட பாராளுமன்ற ஆசனங்களை கொண்டிருக்கும் - தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளை ஏன் சந்திப்பதில்லை? இது எதனை உணர்த்துகின்றது?

இங்கு ஒரு விடயத்தை ஆழமாக உற்றுநோக்க வேண்டும். அதாவது, தமிழ் மக்களின் பிரதிநிதிகளை சிறுபான்மை இனமொன்றின் பிரதிநிதிகளாகவே அவர்கள் நோக்குகின்றனர். சிறுபான்மை தமிழர்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று எண்ணும்போது மட்டுமே அவர்கள் தமிழ் பிரதிநிதிகள் பக்கமாகத் திரும்புகின்றனர். மற்றும்படி அவர்களின் பிரத்தியேக கவனம் பெரும்பான்மை இனத்துக்கும் தங்களுக்குமான உறவை பேணிக் கொள்ளும் நோக்கிலேயே அமைந்திருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி தென்னிலங்கையின் பிரதான அரசியல் சக்திகளில் ஒன்றாக எழுச்சியுற்றிருப்பதாக கணிப்புகள் வெளியாகிவரும் நிலையில்தான் தேசிய மக்கள் சக்தியின்மீது அவர்களின் பார்வை திரும்பியிருக்கின்றது. இந்த அடிப்படையில்தான் இலங்கைத் தீவின்மீது கரிசனை கொண்டிருக்கும் அனைத்துலக இராஜதந்திரிகள் சமூகம் தொடர்ந்தும் அநுரகுமாரவுடன் ஊடாடி வருகின்றது.

மறுபுறம் திரும்பிப் பார்த்தால் தமிழ் மக்கள் மீதான கரிசனையோ கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது. இதற்கு என்ன காரணம்? பதில் இலகுவானது - அதாவது, தமிழ் மக்களை எவருமே ஒரு தேவையுள்ள மக்கள் கூட்டமாகக் கருதவில்லை - மாறாக, தேவைப்படும்போது பயன்படுத்திவிட்டுத் தூக்கிவீசும் பிளாஸ்ரிக் குவளைகள் போன்றே எண்ணுகின்றனர். ஏனெனில், கடந்த பதினான்கு வருடங்களாகத் தமிழ் மக்களின் அரசியல் அவ்வாறுதான் உற்றுநோக்கப்பட்டது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்தவர்கள் தமிழ் மக்களை இலங்கைத் தீவின் ஒரு தரப்பாக முன்னிறுத்தக் கூடியவாறான அரசியலை முன்னெடுக்கவில்லை. இதன் காரணமாகவே தமிழ் மக்களை ஒரு பயனுள்ள மக்கள் கூட்டமாக இராஜதந்திர சமூகம் நோக்கவில்லை.

இதனை மாற்றியமைக்கும் வகையில் காத்திரமான தீர்மானங்களை மேற்கொள்ளும்போது மட்டும்தான் தமிழ் மக்களின் பக்கமாக இராஜதந்திர சமூகம் திரும்பும். அதற்கான வாய்ப்புகள் என்னவென்று கணித்து அதற்கேற்ப தமிழ் கட்சிகளின் தலைவர்கள் செயலாற்ற வேண்டும். இந்தப் பின்னணியில் நோக்கினால் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமையலாம். ஆனால், அதற்கு ஏற்றவாறு தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும்.

# தீர்மானங்களை எடுக்கும் சகல மட்டங்களிலும் பெண்களை இணைப்பதற்கு அழைப்பு

அபிலாசைகளுக்கும் யதார்த்தத்துக்கும், சொல்லுக்கும் செயலுக்கும், சட்டங்களுக்கும் அவற்றின் நடைமுறைப்படுத்தலுக்கும் இடையில் உள்ள வெளி இலங்கையில் ஒரு முக்கிய பிரச்சினை. பாலின உறவுகளும் இதற்கு விதிவிலக்கு இல்லை.

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

தேசிய சமாதானப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த “சமூக ஈடுபாடு, கற்றல் மற்றும் ஆதரித்தல் ஊடாக பெண்களை உள்வாங்குவதற்கான முயற்சிகள்” தொடர்பிலான கருத்தரங்கு நாட்டின் ஏழு மாவட்டங்களில் இருந்து 120இற்கும் அதிகமான பெண் தலைவர்களையும் செயற்பாட்டாளர்களையும் ஓர் அரங்கில் ஒன்றிணைத்தது. குடிமக்களுக்கு சட்டங்களைப் பற்றியும் அவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவது குறித்தும் அறிவு இல்லை என்ற அவதானிப்பு இந்த கருத்தரங்கில் முக்கியமாக முன்வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றியவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஒவ்வொரு வாக்காளருக்கும் எதிர்வரும் தேர்தல்களில் வழங்கப்படும் மூன்று விருப்புவாக்குகளில் குறைந்தபட்சம் ஒரு வாக்காவது பெண் வேட்பாளருக்கு அளிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு விருப்புரிமை வாக்குமுறையைப் பயன்படுத்தமுடியும் என்று வலியுறுத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள தனதுரையில் பாராளுமன்றத்தில் ஒரு சிலர் விதிவிலக்காக பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனித உரிமைகள் குறிப்பாக பெண்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களில் ஒன்றிணைந்து நிற்பதை சுட்டிக்காட்டினார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிரான தொடர்பான ஐக்கிய நாடுகள் முன்னாள் அறிக்கையாளர் கலாநிதி ராதிகா குமாரசுவாமி, சோமாலி உதாரணத்தை விளக்கிக்கூறுகையில் அந்த நாட்டில் ஐந்து பழங்குடி இனங்கள் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டு கொலைகளைச் செய்து கொண்டிருந்தன என்றும் ஆறாவது இனமாக அமைந்த சோமாலி பெண்கள் இயக்கம் ஒன்றை ஆரம்பித்து பாராளுமன்றத்தில் 12 சதவீத கோட்டாவை தங்களுக்கு உறுதிசெய்து கொண்டனர் என்று குறிப்பிட்டார்.

நிகழ்வில் பங்கேற்ற தேசியமட்ட அரசியல் பிரதிநிதிகளிடம் சமூகத்தலைவிகள் அறிக்கையொன்றைக் கையளித்தனர். அந்த அறிக்கை “வொய்ஸ்” தலைவிகள் ஏழு மாவட்டங்களிலும் முன்னெடுத்த திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடல்கள் மூலமாக தங்களால் வெளிக்கொணரப்பட்ட பிரச்சினைகள், பெண்களுக்கு மாத்திரமல்ல முழுச்சமூகமும் எதிர்நோக்குவதாக அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு முன்வைக்கப்பட்ட விதப்புரைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் வாக்காளர்களில் 56 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்களாக இருக்கின்றபோதிலும், தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஆறு சதவீதமானவர்கள் மாத்திரமே பெண்களாக இருக்கிறார்கள். உள்ளூராட்சி மட்டத்தில் பெண்களுக்கு 25 சதவீத பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு 2018 உள்ளூராட்சி தேர்தலின்போது நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டம் உள்ளூராட்சி தேர்தலை அரசாங்கம் உரிய நேரத்தில் நடத்தத்தவறியதனால் கடந்த ஒரு வருடகாலமாக பயனில்லாமல் கிடக்கிறது.

நிலைபேறான தீர்வுகளைக் காண்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற இன்றைய காலப்பகுதியில் பெண்களை உள்வாங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஷங் தனதுரையில் வலியுறுத்தினார். சமூகத்தின் சகல தரப்புகளினதும் நல்வாழ்வை உறுதிப்படுத்தக்கூடியதாக சகலரையும் அரவணைக்கும் ஜனநாயகத்தின் முக்கியமான ஒரு கூறாக பெண்களை உள்வாங்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வெளியிட்ட விபரங்களின்படி நாட்டின் பொருளாதார மாற்றத்தை உறுதிப்படுத்த கடந்த 14 மாதங்களில் 42 சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேலும் 62 சட்டங்கள் கொண்டுவரப்படவிருக்கின்றன. அவற்றில் இரு சட்டமூலங்கள் தேசிய பெண்கள் ஆணைக்குழுவை அமைப்பது உட்பட பெண்களின் உரிமைகளுடன் தொடர்புடையவை.


நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தை வலியுறுத்திக்கேட்டுக்கொள்கிறது.

இலங்கையில் பெண்களின் கல்விமட்டம் உயர்வானதாக இருக்கின்றபோதிலும், 2023 ஆகஸ்ட் அளவில் பாராளுமன்றங்கள் சங்கத்தின் பெண்கள் பிரதிநிதித்துவ தரவரிசையில் 187 நாடுகளில் இலங்கை 180 வது இடத்தில் இருப்பது அதிர்ச்சி தருகிறது.

நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள் உண்மையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு தேசிய மட்டத்தில் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகளில் பெண்களின் பங்கேற்பு உச்ச முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அடுத்த பாராளுமன்றத்தில் பெண்களினதும் ஏனைய விளிம்புநிலைக் குழுக்களினதும் போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யக்கூடியதாக வேட்பாளர்கள் தெரிவின்போது கோட்டா முறையொன்றை சுயமாகவே கடைப்பிடிக்குமாறு தேசிய சமாதானப் பேரவை சகல அரசியல் கட்சிகளையும் வேண்டிக்கொள்கிறது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 20 புதன்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 07
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : ஏனாதசி




**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சகஊழியர்களால் நிம்மதி கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்கவேண்டி வரும். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**சிம்மம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**துலாம்**
உணர்ச்சிவசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் செயல்படுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். சகிப்புத்தன்மை தேவைப்படும்

**மகரம்**
மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சகஊழியர்களின் ஆதரவு கிட்டும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அலுவலகத்தில் சக ஊழியர்களை விட அதிகாரிகளிடம் செல்வாக்கு கூடும்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வேற்றுமதத்தவர்கள் நண்பர்கள் ஆவார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

# பா. ஜ. கவுடன் பா. ம. க. கூட்டணி

சென்னை, மார்ச் 20

பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி அமைப்பதற்காக பா. ஜ. க. - பா. ம. க. இடையிலான ஒப்பந்தம் நேற்று செவ்வாய்க்கிழமை கையெழுத்தானது. இதில் பா. மகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.



பா. ம. க. - பா. ஜ. க. இடை யிலான கூட்டணி குறித்து இறுதி முடிவை எடுப்பதற்காக திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் பாமக உயர்நிலை குழு ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், பா. ஜ. கவுடன் கூட்டணி அமைத்து மக்களவை தேர்தலை சந்திக்க முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை ராமதாஸை அவரின் இல்லத்தில் பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை, மத்திய இணை அமைச்சர் எல். முருகன் சந்தித்தனர்.

இரு தரப்பினருக்கும் இடையே நடந்த ஆலோசனையில் முடிவில் பா. ஜ. க. - பா. ம. க. இடையிலான கூட்டணி தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் 10 தொகுதிகள் பா. ம. கவுக்கு ஒதுக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டன. (ஐ)

## மாற்றத்துக்கான முடிவு

### பா.ம.க தலைவர் அன்புமணி



சென்னை, மார்ச் 20

பிரதமர் நரேந்திர மோடியின் நல்லாட்சி தொடரவும், தமிழ்நாட்டில் மாற்றங்கள் ஏற்படுத்தவும் நாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளோம் - என்று பா. ம. கவின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

"10 ஆண்டு காலமாக பாட்டாளி மக்கள் கட்சி டில்லியில் தேசிய ஜனநாயக கூட்டணியின் அங்கமாக இருந்து வருகிறது. வருகிற மக்களவைத் தேர்தலை தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியுடன் இணைந்து சந்திக்க கட்சி முடிவு செய்திருக்கிறது.

பிரதமர் நரேந்திர மோடியின் நல்லாட்சி தொடரவும், தமிழ்நாட்டில் மாற்றங்கள் ஏற்படுத்தவும் நாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளோம். 60 ஆண்டுகளாக தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டிருப்பவர்கள் மீது மக்களுக்கு வெறுப்பான சூழல் இருக்கிறது. ஒரு மாற்றம் வரவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் ஆழமாக இருக்கிறது. அதை பூர்த்தி செய்யவே இந்த முடிவை நாங்கள் எடுத்துள்ளோம் - என்றார்.

## தமிழக அரசியலில் மாற்றம்!

### அண்ணாமலை தெரிவிப்பு



சென்னை, மார்ச் 20

பாட்டாளி மக்கள் கட்சி எடுத்துள்ள இந்த முடிவு தமிழக அரசியலை முற்றிலுமாக மாற்றி இருக்கிறது - என்று பா. ஜ. கவின் தமிழக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

"தமிழகத்தின் மக்கள் சக்தியாக, தனிப்பெரும் அரசியல் இயக்கமாக இருக்கும் பாட்டாளி மக்கள் கட்சி மிக முக்கியமான ஒரு முடிவை எடுத்து பிரதமர் மோடியின் கரத்தை வலுப்படுத்தியிருக்கிறது. ராமதாஸ் யோசித்துக் கொண்டிருக்கும் பல விசயங்களை பிரதமர் மோடி நாடு முழுவதும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். 2024 மக்களவை தேர்தலில் மக்கள் வெற்றியை கொடுப்பார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் களத்தில் இறங்கியிருக்கிறோம். தமிழகத்தின் அரசியல் நேற்று (நேற்றுமுன்தினம்) இரவில் இருந்து மாறியிருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சி எடுத்துள்ள இந்த முடிவு தமிழக அரசியலை முற்றிலுமாக மாற்றி இருக்கிறது - என்றார். (ஐ)

# தி. மு. கவை ஆதரிக்கும் நிலையில் மக்கள் இல்லை

## இந்திய பிரதமர் மோடி தெரிவிப்பு

கோவை, மார்ச் 20

இனி தி. மு. கவை ஆதரிக்கும் மனநிலையில் மக்கள் இல்லை என்று தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

கோவையில் நேற்று முன்தினம் நடந்த வாகனப் பேரணியில் பங்கேற்ற பின்னர் அவர் தனது எக்ஸ் தளத்தில்,

"தமிழ்நாட்டின் தேர்தல் முடிவுகள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தப் போகிறது. எங்கள் கட்சி மாநிலம் முழுவதும் வலுவான சக்தியாக உருவாகி வருகிறது. இனி தி. மு. கவை ஆதரிக்கும் மனநிலையில் மக்கள் இல்லை" - என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

## 3 தொன் மலர்தூவி மோடிக்கு வரவேற்பு

கோவை, மார்ச் 20



இந்தியப் பிரதமருக்கு 3 தொன் பூக்கள் தூவி கோவை மக்கள் வரவேற்பு அளித்தனர்.

கோவையில் நடந்த வாகனப் பேரணியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் மாலை பங்கேற்றார்.

வழிநெடுகிலும் மக்கள் திரண்டு அவருக்கு வரவேற்பளித்தனர். இதன்போது, அவர்கள் பிரதமரை பூக்கள் தூவி வரவேற்றனர். சுமார் 3 தொன் மலர்கள் தூவி அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வாகனப் பேரணியின்போது பரதம், ஒயிலாட்டம், படுகர் நடனம், கும்மியாட்டம் என 26 வகை நிகழ்ச்சிகளும் பிரதமரை வரவேற்றபோது முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

## ஓ. பி. எஸ்ஸுக்கு நிரந்தரத் தடை!



சென்னை, மார்ச் 20

ஓ. பன்னீர்செல்வம் அ. தி. மு. க. சின்னம், கொடி மற்றும் கடிதத் தலைப்பை பயன்படுத்த நிரந்தரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அ. தி. மு. க. கட்சியிலிருந்து 2022ஆம் ஆண்டு பன்னீர்செல்வம் நீக்கப்பட்டார்.

இந்த நிலையில், அ. தி. மு. கவின் பெயர், கொடி, சின்னம், கடிதத் தலைப்பை பயன்படுத்தத் தடை கோரி எடப்பாடி பழனிசாமி வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் இடைக்கால தடை பிறப்பித்தது. இந்த நிலையில், நேற்று முன்தினம் நீதிமன்றம் நிரந்தர தடையை விதித்துள்ளது. (ஐ)

# ஜப்பான் தூதுவரை சந்தித்தார் அனுர!

## ஜனாதிபதி தேர்தல் குறித்தும் கருத்து பரிமாற்றம்



**கொழும்பு, மார்ச் 20**

**இலங்கைக்கான ஜப்பானின் தூதுவர் மியுகோஷி ஹிடெகிவிற்கும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க விற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்றது.**

இச்சந்திப்பின்போது ஜப்பான் தூதரகத்தின் பதில் பிரதானி மற்றும் இரண்டாம்நிலை செயலாளர் ஆகியோரும், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத்தும் இணைந்துகொண்டனர்.

இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலவரம் குறித்து இருதரப்பும் விரிவாக கலந்துரையாடியதுடன், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் இடையீடுகள் பற்றிய தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு குறித்தும் ஜப்பானின் இராஜதந்திர பிரதிநிதிகளிடம் தெளிவுப்படுத்தப்பட்டதுடன், எதிர்காலத்தில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஜப்பான் தயாராகவுள்ளதாகவும் இதன்போது ஜப்பான் பிரதிநிதிகள் மூலமாக எடுத்துரைக்கப்பட்டது. (அ)



# இளம் விவசாயிகளை சந்தித்தார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 20

அரை ஏக்கர் மிளகாய் பயிரிட்டு ஒன்பது மாதங்களில் 12 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டிய அநுராதபுரம், திறப்பனை, புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த இளம் விவசாயி பந்துல முனசிங்க மற்றும் ஒரு ஏக்கர் தர்பூசணி பயிரிட்டதன் மூலம் இரண்டு மாதங்களில் 4 மில்லியன் ரூபா வருமானம் பெற்ற கல்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் விவசாயி புத்திக சுதர்ஷன ஆகியோர் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர்.

இந்த இளம் விவசாயிகள் தமது அறுவடையின் ஒரு பகுதியுடன் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளனர்.

அத்துடன், வளமான விளைச்சலைப் பெறுவதற்கு வழிகாட்டி அரசாங்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியமைக்காக ஜனாதிபதிக்கு அவர்கள் நன்றி தெரிவித்தனர். (அ)

# கோட்டாவின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் கைது!

கொழும்பு, மார்ச் 20

இராணுவத்தின் கொமாண்டோ படையில் லான்ஸ் கோப்ரல் ஆக பணியாற்றிய முன்னாள் சிப்பாய் ஒருவர் இரண்டு கிராம் ஹெரோய்னுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் உடற் பயிற்சி பயிற்றுவிப்பாளராக கடமையாற்றி முன்னாள் ஜனாதிபதிக்கு நெருக்கமாக இருந்த சந்தேகநபர், கோட்டாபய ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேறிய பின்னர் இராணுவத்தை விட்டு வெளியேறியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், யஹலதன்ன நெல்லிகல பிரதேசத்தில் வசிக்கும் 35 வயதுடையவர். ஹெரோயின் போதைப்பொருள் கடத்துவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேகநபர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது வீட்டை சோதனை செய்த போது, ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# 69 இலட்சம் பேரின் அபிலாஷைகளை நிறைவேற்றும் ஒருவரே வேட்பாளர்!

## கூறுகிறார் உதய கம்மன்பில



கொழும்பு, மார்ச் 20

69 லட்சம்பேரின் அபிலாஷைகளை கைவிட்டுவிட்டு கோட்டாபய ராஜபக்ச ஓடினாலும் அந்த அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவோம் - என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ரணில் விக்கிரமசிங்க ஆட்சியை விரட்டவே 69 லட்சம் பேர் அன்று வாக்களித்தனர். சஜித், அநுர ஜனாதிபதி தேர்தல் போட்டியில் இருந்தபோது தான் 69 லட்சம் பேர் எமது தரப்புக்கு வாக்களித்தனர். அந்த 69 லட்சம்பேரின் அபிலாஷைகளை கோட்டாபய ராஜபக்ச புறந்தள்ளி இருந்தாலும், அவற்றை நிறைவேற்றாமல் தப்பியோடி இருந்தாலும் அவற்றை நிறைவேற்றும் நோக்கில் நாம் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவோம். புதிய கூட்டணி மலரும்.

செப்ரெம்பர் 18 மற்றும் ஒக்ரோபர் 18 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கட்டாயம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதி தேர்தலே முதலில் நடைபெறும் என்பதை எழுதி வைத்துக்கொள்ளுங்கள்-என்றார். (அ)

# போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்ற இளைஞர்களுக்கு நிதியுதவி!

அம்பாறை, மார்ச் 20

அம்பாறை மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்ற இளைஞர்களுக்கு, சுயதொழில் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் 50,000 ரூபாய் பணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கோழிப் பண்ணை, பசு மாடு வளர்ப்பு உள்ளிட்ட சுயதொழில் திட்டங்களை ஆரம்பிக்க ஒவ்வொருவருக்கும் தலா 50,000 ரூபாய் வழங்கி வைக்கப்பட்டது.

அம்பாறையில் உள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (அ)

# நீரில் மூழ்கி இளம் பிக்கு பலி!

கொழும்பு, மார்ச் 20

தப்போவ நீர்த்தேக்கத்தில் மூழ்கி இளம் பிக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரஜரட்டை பிக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த ஹீல்ஒய சங்கானந்த தேரர் என்பவரே நேற்று முன் தினம் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் வனாத்தவில்லு வன்னாத்தவில்லு ஸ்ரீ தர்மராஜ விகாரைக்கு வருகை தந்த மேற்படி இளம் பிக்கு, அங்கிருந்து பிக்குகள் குழுவுடன் தப்போவ நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற போதே இந்த அனர்த்தத்துக்கு முகம் கொடுத்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஆசிரியையை கத்தியால் வெட்டிய மற்றோர் ஆசிரியை கைதானார்!

கொழும்பு, மார்ச் 20

பாடசாலை ஆசிரியை ஒருவரை கத்தியால் வெட்டி காயப்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் மற்றுமொரு பாடசாலை ஆசிரியை கைது செய்யப்பட்டதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த 44 வயதுடைய ஆசிரியை பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவரது கால் மற்றும் கைகளில் வெட்டுக்காயங்கள் உள்ளது எனவும் பதுளை போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

சந்தேகத்திற்குரிய 45 வயதுடைய ஆசிரியையிடம் இருந்து கத்தி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்விரு ஆசிரியைகளும் இரு பாடசாலைகளில் பணியாற்றும் நண்பிகள் எனவும், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சந்தேகநபர் அவரது வீட்டுக்குச் சென்று இவ்வாறு குற்றம் புரிந்துள்ளதாக அறிய முடிகின்றது.

பிரதேசவாசிகள் சந்தேகநபரை பிடித்து 119 என்ற பொலிஸ் அவசர இலக்கத்திற்கு அறிவித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஆறு ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொள்கலன்கள் துறைமுகத்தில்!

## சுங்க அதிகாரிகளின் போராட்டத்தால்

கொழும்பு, மார்ச் 20

**சுங்கத்துறை அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் அடங்கிய 6,000 கொள்கலன்கள் கொழும்புத்துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**



சுங்க நிதியத்தை திறைசேரிக்கு உள்வாங்குதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சுங்க அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மேலதிக நேர சேவையில் இருந்து விலகி, சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் 6,000 இற்கும் மேற்பட்ட கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக கொள்கலன் சேவை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த பிரச்னைக்கான உரிய தீர்வொன்றை இன்றைய தினத்திற்குள் வழங்க எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஆபத்தான நிலையில் 18 நீர்த்தேக்கங்கள்!

கொழும்பு, மார்ச் 20

நாட்டில் நிலவும் வறட்சியான வானிலை காரணமாக 18 நீர்த்தேக்கங்கள் தற்போது ஆபத்தான நிலையில் காணப்படுவதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அனோஜா களுஆராச்சி, நாட்டின் பல பகுதிகளில் நிலவும் வரட்சியான காலநிலைக் காரணமாக அத்தியாவசியமற்ற தேவைகளுக்கு நீரை பயன்படுத்த வேண்டாம் என மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும், நாட்டில் நிலவும் வறட்சியான வானிலை காரணமாக 18 நீர்த்தேக்கங்கள் தற்போது ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வாத்துவை, எஹெலியகொட மற்றும் ரதம்பல பிரதேசங்களுக்கு நீர் விநியோகம் தற்போது குறைந்த அழுத்தத்தில் விநியோகிக்கப்படுவதால், அந்த பகுதிகளுக்கு பவுசர்கள் மூலம் நீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# தென்கிழக்கு பல்கலையில் முழுநாள் வேலைநிறுத்தம்!



அம்பாறை, மார்ச் 20

பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், நிருவாக உத்தியோகத்தர்கள் சங்கங்கள், கல்விசார் ஆதரவு சங்கங்கள் மற்றும் அரசியல் சங்கங்களின் கூட்டுக் குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில், தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீனின் தலைமையில் நேற்று பல்கலைக்கழக முன்றலில் வேலைநிறுத்தத்துடன் கூடிய பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமிலின் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் நாட்டின் கடுமையான பொருளாதார நெருக்கடியால் சடுதியாக அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவினை ஈடுசெய்ய முடியாத நிலையில், நீண்டகால சம்பள முரண்பாடுகளை சீர்செய்ய விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்படுவதை வெளிக்கொணரும் முகமாகவும் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலுமுள்ள கல்விசாரா ஊழியர்கள் இவ்வாறான முழுநாள் அடையாள பணிப்பகிஸ்கரிப்பை மேற்கொள்வதாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (அ)

# கிழக்குப் பல்கலைக்கழக நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

## ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 20

இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழக ஊழியர்கள் 15 வீத சம்பள அதிகரிப்பு கோரி முன்னெடுக்கும் தொடர் தொழிற்சங்க நடவடிக்கையின் ஒரு அங்கமாக கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் முன்னெடுத்த ஒருநாள் பணி பகிஷ்கரிப்பு மற்றும் அரசிற்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று மட்டக்களப்பில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள் நிலையம் முன்பாக நடைபெற்றது.




தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் பணிபகிஷ்கரிப்பு காரணமாக பல்கலைக்கழகங்களில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த பரீட்சைகள் குறிப்பாக மாணவர்களின் இறுதிப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதுடன் ஏனைய நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

சம்பள முரண்பாடு தீர்க்கப்படும்வரை முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பல்கலைக்கழக கட்டமைப்பில் ஏற்படும் பாதிப்புகளுக்கு அரசு, கல்வியமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பொறுப்பேற்க வேண்டுமென கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா விபத்தில் ஒருவர் பலி!

வவுனியா, மார்ச் 20

வவுனியா பூவரசங்குளத்தில் பஸ்ஸில் ஏற முற்பட்டவரை பஸ் மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

பூவரசங்குளம் சந்தியிலுள்ள பேருந்து தரிப்பிடத்தில் நேற்று முன் தினம் காலை இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியாவிலிருந்து தலைமன்னார் நோக்கி பயணித்த தனியார் பஸ் குறித்த பஸ் தரிப்பிடத்தில் தரித்து நின்ற சமயத்தில் பஸ்ஸில் ஏறுவதற்காக வீதியின் மறுபக்கத்திலிருந்து பஸ்ஸின் முன்பக்கமாக வந்த மூதாட்டியொருவர் ஏற முற்பட்ட சமயத்தில் சாரதி பஸ்ஸின்பஸ்ஸை செலுத்தியமையினால் பஸ் சில்லில் சிக்குண்டு அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தது துடன் பஸ் சாரதியினையும் கைது செய்தனர்.

மேலும் உயிரிழந்தவரின் சடலம் பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ் விபத்தில் பூவரசங்குளம் மணியர்குளம் பகுதியினை சேர்ந்த 76 வயதுடைய சிவக்கொழுந்து வள்ளிப்பிள்ளை என்பவரே உயிரிழந்துள்ளார். (அ)

# இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதிக்கு அங்கீகாரம்!

கொழும்பு, மார்ச் 20

எதிர்வரும் சிங்கள இந்து புத்தாண்டு காலத்திற்காக இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, இந்தியாவில் இருந்து ஏப்ரல் மாதத்தில் 42 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட உள்ளன.

அதற்கு அமைச்சரவையின் ஒப்புதலும் கிடைத்துள்ளதுடன் இதுவரை 18 மில்லியன் முட்டைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் 42 மில்லியன் முட்டைகள் பண்டிகை கால தேவைக்காக இறக்குமதி செய்யப்பட வேண்டும் என கணக்கிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# உரித்து வேலைத்திட்டத்தின் கீழ் இரு திட்டங்களுக்கு அங்கீகாரம்!

கொழும்பு, மார்ச் 20

'உரித்து' வேலைத்திட்டத்தின் கீழ், அரச காணிகளுக்கு உரிமையுடன் கூடிய அறுதி உரித்தை வழங்குவதற்கும், ஒரு மில்லியன் இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சமர்ப்பித்த யோசனைக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 'உரித்து' வேலைத் திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில், பத்திரதாரர்கள் மற்றும் கையளிப்புப் பத்திர தாரர்களுக்கு அரச காணிகளில் அறுதி உரித்தை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது இரண்டு மில்லியன் குடும்பங்களுக்கு அவர்கள் வசிக்கும் காணிகளுக்கான பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், நாடளாவிய ரீதியில் ஒரு மில்லியன் இளம் தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு வேலைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தகவல்களை பெற 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் ஊடாக, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் படையணியை ஈடுபடுத்தி தகவல்களை சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கிணங்க, பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் காணப்படுகின்ற பொறிமுறையைப் பயன்படுத்தி தேவையான தகவல்களை சேகரித்து 'உரித்து' வேலைத்திட்டம் மற்றும் ஒரு மில்லியன் இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தைத் துரிதமாக மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசுக்கு எதிராகவே வேண்டும்!

## கூறுகின்றார் நீதி அமைச்சர்

**கொழும்பு, மார்ச் 20**

**அரசாங்கத்திற்கு எதிராகத்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்திருக்க வேண்டும்" என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் முதல் விவாதத்தின் போதே நீதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இணைய பாதுகாப்பு சட்டமூலம் தான் உலகத்திலேயே மிகவும் மோசமான சட்டமூலம் என வைத்துக் கொள்வோம். ஆனால், சபாநாயகருக்கு இது தொடர்பாக பேசவோ அல்லது திருத்தங்களையோ செய்யத்தான் முடியுமா? அல்லது சட்டமூலத்தை அவரால் நிராகரிக்கதான் முடியுமா?

இணைய பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்தது தவறு எனில், அரசாங்கம்தான் அந்தத் தவறை செய்துள்ளது. எனவே, அரசாங்கத்திற்கு எதிராகத்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்திருக்க வேண்டும். இந்த விடயத்தில் சபாநாயகரை குற்றஞ்சாட்ட முடியாது. பெரும்பான்மையானவர்கள் எடுத்த முடிவை சபாநாயகர் அங்கீகரித்தே ஆக வேண்டும். இதுதான் அவருக்கான தத்துவம். எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட்டுள்ள தவறான ஆலோசனையின் பேரிலேயே இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது- என்றார்.

(அ)

# சிறை அதிகாரி இல்லம் முன்பாக மலர் வளையம்

## கைதியை வேறு சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 20

காலி சிறைச்சாலை அதிகாரி ஒருவரின் தனிப்பட்ட இல்லத்திற்கு முன்பாக மலர் வளையம் வைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கைதியை வேறு சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர் காலி சிறைச்சாலையில் இருந்து நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் பேச்சாளர் காமினி பீ திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலி சிறைச்சாலைக்கு வெளியில் இருந்து, தடைசெய்யப்பட்ட பொருட்கள் அடங்கிய பொதி வீசப்பட்டிருந்த நிலையில், அதனை குறித்த சிறைச்சாலை அதிகாரி மீட்டுள்ளார்.

இதனையடுத்து அம்பலாங்கொடையில் உள்ள தனிப்பட்ட இல்லத்திற்கு முன்பாக மலர் வளையம் மற்றும் மெழுகுவர்த்தி என்பன வைக்கப்பட்டிருந்தன. (அ)

# இரு பெண்களின் அடிப்படை உரிமை மனுக்கள் விசாரணையின்றி தள்ளுபடி!

கொழும்பு, மார்ச் 20

இரண்டு பெண்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்களை உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

அரகலய போராட்டத்துக்கு ஆதரவாக கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்துக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் மனிதாபிமானமற்ற முறையில் தங்களை இழுத்துச் சென்று கைது செய்ததன் மூலம் தங்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

எவ்வாறாயினும், இது தொடர்பான காணொளி காட்சிகளை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த சிரேஷ்ட அரச சட்டத்தரணி, குறித்த இரண்டு பெண்களையும் பொலிஸார் மனிதாபிமானமற்ற முறையில் இழுத்துச் செல்லவில்லை என குறிப்பிட்டிருந்தார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த மூவரடங்கிய நீதியரசர்கள் ஆயம் மனுவை விசாரணையின்றி தள்ளுபடி செய்வதற்கு தீர்மானித்துள்ளது. (அ)

# அதிக வெப்பநிலையால் விலங்குகளுக்கும் பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 20

வெப்பமான காலப் பகுதியானது வீட்டில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளுக்கும் ஆபத்தான நோய்களையும் ஏற்படுத்தும் எனக் கால்நடை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பகல் வேளையில் விலங்குகளை மூடிய வாகனங்களில் ஏற்றிச் செல்வதைத் தவிர்க்குமாறும் இந்த நாட்களில் நாய் போன்ற விலங்குகளுடன் விளையாடுவதைத் தவிர்க்குமாறும் கால்நடை வைத்தியர் அருண சந்திரசிறி தெரிவித்தார்.

விலங்குகளின் உடல் சூடாக இருப்பதனால் தினமும் செல்லப்பிராணிகளை குளிப்பாட்டுதல், கூந்தல் உள்ள விலங்குகளுக்கு இரண்டு அல்லது மூன்று முறை குளிப்பாட்டுதல், குடிப்பதற்குத் தேவையான அளவு சுத்தமான தண்ணீர் கொடுத்தல், பகல் வேளையில் ஐஸ் கட்டிகள் கொடுத்தல் போன்றவற்றை செய்யலாம்.

வீட்டில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகள் மயங்கி கீழே விழுந்தால், கால்நடை மருத்துவரிடம் அழைத்துச் செல்வதற்கு முன் குளிர்ந்த நீரில் உடலைக் கழுவுவதால் உயிரைக் காப்பாற்ற முடியும் என வைத்தியர் அருண சந்திரசிறி சுட்டிக்காட்டினார்.

செல்லப்பிராணிகள் மாத்திரமின்றி வீட்டில் வளர்க்கப்படுகின்ற விலங்குகள் அனைத்தும் அதிக வெப்பநிலையால் பாதிக்கப்படுகின்றன, அதிக வெப்ப நிலையால் மென்மையான தோல் கொண்ட விலங்குகளுக்குக் காயங்கள் கூட ஏற்படலாம் என்றும் அவற்றை எப்போதும் நிழலான இடங்களில் கட்டி வைக்கலாம் என்றும் கால்நடை வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

# சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை வேறாக்குவதற்கு திட்டம்

கொழும்பு, மார்ச் 20

சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து வேறான தொரு அரச தொழில் முயற்சியாண்மையாக நிறுவ அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இலங்கையிலுள்ள ஒரேயொரு எரிபொருள் சுத்திகரிப்பு நிலையமான சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் 1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அதனை மேம்படுத்தி, மேலும் 25 வருடங்கள் பயன்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்க முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்குத் தேவையான முதலீட்டை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் துறையினர் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வேறானதொரு அரச தொழில் முயற்சியாண்மையாக, சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க ஹங்கேரி - இலங்கை ஒப்பந்தம்!

கொழும்பு, மார்ச் 20

விளையாட்டு மற்றும் விளையாட்டுக் கல்வி போன்ற துறைகளை ஊக்குவிக்கும் முகமாக இலங்கை அரசாங்கத்துக்கும் ஹங்கேரி அரசாங்கத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட முன்மொழியப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னான்டோ சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

குறித்த ஒப்பந்த வரைவுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதன்படி, விளையாட்டு மற்றும் விளையாட்டுக் கல்வி போன்ற துறைகளை ஊக்குவித்து இரு தரப்பினர்களுக்கிடையில் ஒத்துழைப்புக்களை விருத்தி செய்வதற்கும், வலுப்படுத்துவதற்காக இரு நாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன் மொழியப்பட்டுள்ளது. (அ)

# பஸிலின் கூட்டணி கோரிக்கை; நிராகரித்த ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மார்ச் 20

பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு தமது கட்சி என அறிவித்து, பஸில் ராஜபக்ச விடுத்துள்ள அழைப்பை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

அத்துடன், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் இதே நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது.

நாட்டின் நலன்கருதி பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என புதியதொரு கூட்டணிக்கு பஸில் ராஜபக்ச அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க ,

" நாட்டை வங்குரோத்தாக்கிய தரப்புகளுடன் எவ்வாறு இணைந்து செயற்படுவது? உயர் நீதிமன்றம்கூட தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது. இவ்வாறான தலைமைகளுடன் எப்படி இணைவது? இதனை மக்கள் அனுமதிப்பார்களா? இல்லை. மக்கள் நிராகரித்துள்ளனர். இந்த பயணம் சாத்தியமாகாது. தமது ஆட்சியை தக்கவைக்கவே இப்படியான முயற்சி இடம்பெறுகின்றது. முதலில் தேர்தலை நடத்தட்டும். அப்போது மக்கள் ஆணை வழங்குவார்கள்." என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, மொட்டு கட்சி வங்குரோத்து அடைந்துவிட்டது. எனவேதான் இப்படியான கதைகள் வருகின்றன. மக்களை திசைதிருப்பும் நோக்கிலேயே இப்படியான யோசனைகள் வருகின்றன என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (அ)

# வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அரசினால் இரு மாதங்களுக்கு அரிசி!

கொழும்பு, மார்ச் 20

நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு 2 மாதங்களுக்கு அரிசி வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதேநேரம், 2024 சிறுபோகத்திற்கான நெல் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மாவட்ட செயலாளர்கள் அல்லது அரசாங்க அதிபர்கள் மூலமாக அடையாளம் காணப்பட்டுள்ள குறைந்த வருமானம் கொண்ட 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு தலா 10 கிலோ வீதம் அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தை 2 மாதங்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பண்டிகைக் காலத்தை முன்னிட்டு 42 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தின் போது, ஜனாதிபதி முன்வைத்த குறித்த இரண்டு யோசனைகளுக்கே அமைச்சரவையினால் குறித்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒன்பது நாட்களாக மூடி கிடக்கும் திருக்கோவில் வைத்தியசாலை!

## இன்று ஆளுநர் தலைமையில் திருமலையில் கூட்டம்

காரைதீவு, மார்ச் 20

**கடந்த ஒன்பது நாட்களாக காலமாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப்பகிஸ்கரிப்பினால் மூடிக்கிடக்கின்றது.**

**இதனால் அந்த பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 32 ஆயிரம் தமிழ்மக்கள் வைத்திய சேவையின்றி பாதிக்கப்பட்டுள்ளார்கள்.**

**அவசர சிகிச்சைகளுக்காக அப்பிரதேச மக்கள் கால நேரபணம் செலவுசெய்து அக்கரைப்பற்று வைத்திய சாலைக்கு செல்லவேண்டிய துர்பாக்கிய நிலையில் உள்ளனர்.**

இது தொடர்பாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் மர்சூத்திடம் தொடர்பு கொண்டு நிலைமையைக் கேட்டபோது..

வைத்தியசாலை செயற்பாடுகள் இன்னும் வழமைக்கு திரும்பவில்லை. கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு செயலாளர், கிழக்கு மாகாண பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினரின் கலந்துரையாடல் கூட்டம் இங்கு நடைபெறவிருக்கிறது.அதன்பின்னர் முடிவுகள் தெரியவரும்-என்றார்.

இதேவேளை, நேற்று முன்தினம் திங்கட்கிழமை திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வுக்கு வருகை தந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் பிரதேச செயலாளரும் வைத்தியசாலை மூடப்பட்டு கிடப்பது தொடர்பாகவும் அது திறக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் தெரிவித்தார்கள்.

அதற்கு, அவர் இன்று புதன்கிழமை திருகோணமலையில் கூட்டம் இடம்பெறும். அதில் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தொடக்கம் சம்பந்தப்பட்ட சகலரையும் அழைத்துள்ளார்.

அதன்படி இன்று புதன்கிழமை திருமலையில் நடைபெறும் இறுதி கட்ட கூட்டத்திற்கு பிற்பாடு வைத்தியசாலை திறப்பு தொடர்பாக அறிவிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

இது இவ்வாறிருக்க, ஒரு வாரத்துக்கு முன்பு மரதன் ஓடிய ஒரு மாணவனின் இறப்பைத் தொடர்ந்து அங்கு வைத்திய சாலை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதும் அதன் போது வைத்தியசாலை கண்ணாடிகள் பெயர் பலகைகள் உடைக்கப்பட்டதும் தெரிந்ததே.

இதனை அடுத்து தங்களுக்கு பாதுகாப்பின்மை என்று கூறி வைத்தியர்கள் வெளியேறினார்கள்.

அதனால் அன்றிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை வரை ஒன்பது நாட்களாக வைத்திய சாலை மூடப்பட்டுள்ளது. அங்கே எவ்விதமான வைத்திய சேவைகளும் இடம் பெறவில்லை.

இந்த குறிப்பிட்ட காலப் பகுதியில் பாம்புக்கடி தூக்கிட்டு தற்கொலை முயற்சி போன்ற பல நோயாளிகள் வந்தும் அதை நேரடியாக அக்கரைப்பற்று ஆதரவைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

இவ்வேளையில் வைத்திய சாலை மீள திறக்கப்பட வேண்டும். பொதுமக்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்ற நோக்கில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல பொது அமைப்புகள் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் தெரிவிக்கையில், தான்மறுநாளே அங்கு பயணித்து வைத்திய அத்தியட்சகர், பொலிசார் மற்றும் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஆகியோரோடு தொடர்பு கொண்டு நிலைமையை தணிக்க முயற்சித்ததாகவும் வைத்திய சாலையை மீளத்திறக்க முயற்சிகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

பின்பு பொலிசாரின் பாதுகாப்பு கோரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் பேசி வைத்தியசாலை பாதுகாப்பிற்கு பொலிசாரை அமர்த்த நடவடிக்கை எடுத்ததாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை அரச வைத்தியர்கள் சங்கம் தங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அவர்கள் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றமை தெரிந்ததே.

மாணவனின் மரணம் மற்றும் ஆர்ப்பாட்டம் தொடர்பாக திருக்கோவில் பொலீசார் வலயக்கல்வி அலுவலகம் மற்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

இருந்தபோதிலும் கடந்த ஒன்பது நாட்களாக வைத்திய சேவை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

எது எப்படி இருப்பினும் இன்றைய தினம் புதன்கிழமை ஒரு முழுமையான கலந்துரையாடல் ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னிலையில் திருமலையில் இடம் பெறும் கூட்டத்தின்போது வைத்தியசாலை திறக்கப்படுவதற்கான சாதகமான அறிகுறி தென்படுமென்று பாராளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் அறிவித்தார்.

முதலில் வைத்திய சாலையை திறந்து பொது மக்களுக்கு அத்தியாவசிய சுகாதார சேவையை வழங்குங்கள். பிறகு உங்கள் விசாரணகளை நடத்துங்கள். குற்றப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்துங்கள் தேவையில்லாதோர் என்று இனம் கண்டால் இடம் மாற்றுங்கள்.

எதற்கும் முதலில் வைத்திய சாலையை திறந்து இயக்கச் செய்யுங்கள் என்று பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (அ)

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்திலை பாராட்டிய பௌத்த மதகுருமார்கள்!



அம்பாறை, மார்ச் 20

மல்வத்து மகாவிஹார அனுநாயக்க மற்றும் யக்கல விக்கிரமாரச்சி ஆயுர்வேத பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் வணக்கத்துக்குரிய நியங்கொட தர்ம கீர்த்தி ஸ்ரீசங்கரக்கித விஜிதஸ்ரீ தேரரின் கௌரவிப்பு மற்றும் சன்னஸ்பத்ர விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் அம்பாறை, அரந்தலாவ சர்வதேச பௌத்த கலாசார நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் டீ.வீரசிங்க உட்பட 150 பௌத்த மதகுருமார்கள் கலந்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தலைமை மதகுரு, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மூவின மக்களையும் மதித்து செயற்பட கூடியவர் எனவும், கடந்த காலங்களை விட தற்போது கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களுக்கும் ஒரே விதமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது எனவும், ஆளுநரின் ஒவ்வொரு செயற்பாடுகளும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த கூடிய வகையில் இருப்பதாகவும், மூவின மக்கள் மத்தியிலும் ஆளுநருக்கு அதிக மரியாதை காணப்படுவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த முன்னிலையில் கருத்து தெரிவித்தார். (அ)

# திருக்கோவில் பிரதேச செயலகத்தில் புதிய கணக்காளராக ஏ.எல்.எம்.றிபாஸ்



அம்பாறை, மார்ச் 20

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கணக்காளர் ம.அரசரெத்தினத்தின் இடமாற்றத்தினை தொடர்ந்து புதிய கணக்காளராக ஏ.எல்.எம்.றிபாஸ் தனது கடமையினை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந் நிகழ்வு பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்தின் தலைமையில் இடம்பெற்றது. (அ)

# அம்பாறை சமுர்த்தி பணிப்பாளராக சாபீர்!



அம்பாறை, மார்ச் 20

அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராக அட்டாளைச்சேனை பிரதேச செயலக முன்னாள் செயலாளர் எம்.ஏ.சி.அகமட் ஸாபீர் நேற்று செவ்வாய்க்கிழமை கடமையேற்றுள்ளார்.

இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், உள்ளிட்ட உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (அ)

# இந்திய கேரள பஞ்சாயத்து முறையை பின்பற்றினால் சமத்துவம் பேணப்படும்

## சர்வதேச மகளிர் உரிமை ஆர்வலர் லோகேஸ்வரி

காரைதீவு, மார்ச் 20

பெண்கள் அரசியல், சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி போன்றவற்றில் சமத்துவமாக செயற்படுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் . அதற்கு இந்தியாவில் கேரளா மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பஞ்சாயத்து முறையை பின்பற்ற வேண்டும்.

-இவ்வாறு பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் செயலாளரும் மனித அபிவிருத்தி தாபன நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமாகிய திருமதி எஸ். லோகேஷ்வரி தெரிவித்தார்.

மனித அபிவிருத்தி தாபனமும் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியும் இணைந்து கல்முனை இஸ்லாமபாத் பொது கட்டிடத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வினை நேற்று முன்தினம் நடத்தியது.

வேள்வி பெண்கள் அமைப்பின் உப தலைவியான எம். றிலீபா பேகம் தலைமைல் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் செயலாளரும் மனித அபிவிருத்தி தாபன நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமாகிய திருமதி சிவப்பிரகாசம் லோகேஷ்வரி கலந்து சிறப்பித்தார்.




இந் நிகழ்விக்கு மனித அபிவிருத்தி தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தார்கள், அரசியல் செயற்பாட்டாளார்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் அமைப்புகளின், இளைஞ்சர் அமைப்புகள் ஆகியவெற்றின் முக்கியஸ்தார்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள். (அ)




# பாகிஸ்தான் சுப்பர் லீக் இஸ்லாமாபாத் சம்பியன்!

கராச்சி, மார்ச் 20

பாகிஸ்தான் சுப்பர் லீக் (பி. எஸ். எல்.) இருபது - 20 கிரிக்கெட் தொடரில் முல்தான் சுல்தான் அணியை 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றுள்ளது இஸ்லாமாபாத் யுனைற்றட் அணி. பி. எஸ். எல். தொடரில் இது அந்த அணி வெல்லும் மூன்றாவது பட்டம்.

கராச்சி நகரில் நடந்த இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற முல்தான் சுல்தான் அணி துடுப்பெடுத்தாடியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 159 ஓட்டங்கள் எடுத்தது.

அணித்தலைவர் ரிஸ்வான் 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். உஸ்மான் கான், 57 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இப்திகார் அகமது, 20 பந்துகளில் 32 ஓட்டங்கள் எடுத்தார்.

இஸ்லாமாபாத் யுனைற்றட் அணி சார்பில் இமாத் வாசிம் 5 விக்கெட்களை கைப்பற்றினார்.

160 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இஸ்லாமாபாத் யுனைற்றட் அணி விரட்டியது. மார்ட்டின் குப்தில் 32 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்து ரன் அவுட் ஆனார். அஸம் கான் 22 பந்துகளில் 30 ஓட்டங்கள் எடுத்தார். ஆட்டம் கடைசி ஓவர் வரை சென்றது. அந்த ஓவரில் இஸ்லாமாபாத் யுனைற்றட் அணியின் வெற்றிக்கு 8 ஓட்டங்கள் தேவைபட்டன.

முதல் நான்கு பந்துகளில் 7 ஓட்டங்கள் எடுத்தது. ஐந்தாவது பந்தில் நஸீம் ஷா 17 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கடைசிப் பந்தில் ஹூனைன் ஷா பௌண்ட்ரி விளாசி வெற்றியை உறுதி செய்தார்.

20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 163 ஓட்டங்கள் எடுத்தது இஸ்லாமாபாத் யுனைற்றட். இதன் மூலம் 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கடந்த மூன்று பருவங்களாக இறுதிப் போட்டியில் தோல்வியை தழுவிய அணியாக முல்தான் சுல்தான் அணி உள்ளது. (ஐ)

# பங்களாதேஷுடனான டெஸ்ட்! இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

பங்களாதேஸூக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணியில் முன்னாள் அணித் தலைவர்களான அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், திமுத் கருணாரட்ன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அறிவிக்கப் பட்ட 15 பேர் கொண்ட அணியில் இந்த மூவரே அனுபவம் மிக்க சிரேஷ்ட வீரர்களாவர்.

தனஞ்சய டி சில்வாவை தலைவ ராகக் கொண்ட இலங்கை அணி யில் சுழல்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்கவுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நான்கு டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் விளை யாடிய வனிந்து ஹசரங்க, கடைசியாக பங்களா தேஷூக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 2021இல் விளையாடியிருந்தார்.

அத்துடன், அறிமுக வீரராக வலதுகை சுழல்பந்து வீச்சாளர் நிஷான் பீரிஸ் இடம்பெற்றுள்ளார். நீர்கொழும்பு புனித பேதுருவானர் கல்லூரியின் முன்னாள் வீரரான நிஷான் பீரிஸ் முதல்தர உள்ளூர் கிரிக்கெட்டில் 37 போட்டிகளில் 153 விக்கெட்களைக் கைப்பற்றியுள்ளார். ஆனால், அவர் விளையாடும் பதினொருவரில் இடம்பெறுவாரா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**அணி விவரம்:**

தனஞ்சய டி சில்வா, குசல் மெண்டிஸ் (உபஅணித் தலைவர்), அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், சதீர சமரவிக்கிரம, ரமேஷ் மெண்டிஸ், பிரபாத் ஜய சூரிய, விஷ்வ பெர்னாண்டோ, கசுன் ராஜித, கமிந்து மெண்டிஸ், லஹிரு குமார, லஹிரு உதார, சாமிக குண சேகர, நிஷான் பீரிஸ், வனிந்து ஹசரங்க.

# இலங்கையுடனான ஒருநாள் போட்டி; தொடரை வென்றது பங்களாதேஷ்




சட்டோகிராம், மார்ச் 20

இலங்கை அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்ட பங்களாதேஷ் அணி ஒருநாள் தொடரையும் கைப்பற்றியது.

இலங்கை கிரிக்கெட் அணி பங்களாதேஷ் சென்றுள்ளது. அங்கு 3 இருபது - 20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் தொடர்களில் விளையாடி வருகிறது.

இருபது - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து இரு அணிகளும் ஒருநாள் போட்டியில் விளையாடி வருகின்றன. இரு போட்டிகள் முடிவில், தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது.

இதனையடுத்து தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் 3ஆவது மற்றும் கடைசி போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடியது.

பங்களாதேஷின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 40.2 ஓவர்களிலேயே 235 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக ஜனித் லியனகே சதமடித்தார். இது அவரின் கன்னிச் சதமாக அமைந்தது. 102 பந்துகளில் 101 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காதிருந்தார்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில் தஸ்கின் அகமது அதிகபட்சமாக 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

236 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணி தொடக்கத்தில் விக்கெட்களை இழந்து தடுமாறியது. இருப்பினும் அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் தன்சித் ஹசன் சிறப்பாக விளையாடி அணியை வெற்றி பெற வைத்தார். அவருக்கு சிறப்பாக ஒத்துழைப்பு கொடுத்த ரிஷாத் ஹொசைன் வெறும் 18 பந்துகளில் 48 ஓட்டங்கள் அடித்து அணியின் வெற்றியில் பங்காற்றினார்.

40.2 ஓவர்களிலேயே 6 விக்கெட்கள் இழப்புக்கு 237 ஓட்டங்கள் அடித்த பங்களாதேஷ் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் தரப்பில் அதிகபட்சமாக அதிரடியாக விளையாடிய தன்சித் ஹசன் 84 ஓட்டங்கள் குவித்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் அதிகபட்சமாக லஹிரு குமார 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

ரிஷாத் ஹொசைன் இந்த போட்டியின் ஆட்ட நாயகனாகவும், நஜ்மூல் ஹொசைன் சாண்டோ தொடர் நாயகனாகவும் தெரிவாகினர். (ஐ)

# அயர்லாந்துடனான இருபது - 20; தொடரை வென்றது ஆப்கான்!




ஷார்ஜா, மார்ச் 20

ஆப்கானிஸ்தான் - அயர்லாந்து இடையேயான கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் டெஸ்ட் போட்டியில் அயர்லாந்து வெற்றிபெற்றது. ஒருநாள் தொடரை ஆப்கான் கைப்பற்றியது.

இதையடுத்து நடந்த இருபது - 20 தொடர் நடந்தது. 1 - 1 என்ற கணக்கில் தொடர் சமநிலையில் இருந்த நிலையில் கடைசி போட்டியில் இரு அணிகளும் விளையாடின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்கள் எடுத்தது. ஆப்கானிஸ்தான் தரப்பில் அதிரடியாக ஆடிய இப்ராகிம் சத்ரான் 72 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து 156 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயர்லாந்து களமிறங்கியது.

அயர்லாந்தின் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கிய பால்பிர்னி 9 ஓட்டங்கள், ஸ்டிர்லிங் 4 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். இதையடுத்து களம் இறங்கிய வீரர்கள் ஆப்கானிஸ்தானின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர்.

இறுதியில் அயர்லாந்து அணி 17.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 98 ஓட்டங்களை பெற்றது.

ஆப்கானின் பந்துவீச்சில் ஓமர்சாய் 4 விக்கெட், நவீன் உல் ஹக் 3 விக்கெட் வீழ்த்தினர்.

இதன் மூலம் 57 ஓட்டங்க்ள வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அயர்லாந்து 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

# அணியாக பெற்ற வெற்றி சிறப்பு




புதுடில்லி, மார்ச் 20

ஓர் அணியாக ஆர். சி. பி. வெற்றி பெறுவது உண்மையிலேயே சிறப்பு வாய்ந்தது என்று றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தலைவியான ஸ்மிருதி மந்தனா தெரிவித்துள்ளார். மகளிருக்கான பிறீமியர் லீக் இருபது - 20 தொடரில் ஸ்மிருதி மந்தனா தலைமையிலான றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி (ஆர். சி. பி.) சம்பியன் பட்டம் வென்றது.

இறுதிப்போட்டிக்கு பின்னர் ஸ்மிருதி மந்தனா கூறும்போது, "கடந்த ஆண்டு ஏற்பட்ட தோல்விகள் ஒரு வீராங்கனையாக, ஓர் அணித் தலைவியாக மற்றும் ஓர் அணியாக எங்களுக்கு நிறைய விசயங்களைக் கற்றுக் கொடுத்தது. நான் கற்றுக்கொண்ட ஒரு விஷயம் உங்களை நீங்களே நம்புவதுதான்.

தற்போது கிடைத்துள்ள வெற்றியின் மகிழ்ச்சியில் இருந்து மீண்டுவர ஒரு சிறிது காலம் ஆகும். நான் மட்டும் கிண்ணத்தை வெல்லவில்லை, ஒட்டுமொத்த அணியும் வென்றுள்ளது. ஓர் அணியாக ஆர். சி. பி. வெற்றி பெறுவது உண்மையிலேயே சிறப்பு வாய்ந்தது" என்றார். (ஐ)

# ரணில் வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றம்

## கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர

கொழும்பு, மார்ச் 20

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நாங்கள் ஏற்கனவே நிறைவேற்றியுள்ளோம். 16,000 மில்லியன் செலவில் 162 பாலங்கள் நிர்மாணிக்கப்படும் என்று கூறினோம்.



அந்தப் பாலங்களில் ஒரு பகுதியை ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுமக்களிடம் ஒப்படைக்க தயாராக உள்ளோம். இதன்படி 162 பாலங்களும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்திற்கு முன்னர் மக்களிடம் கையளிக்கப்படும்-என்றார். (அ)

# புத்தகம், சீருடை கிடைக்காவிட்டால் உடனடியாக அறிவிக்கப்படவேண்டும்

கொழும்பு, மார்ச் 20

2024 ஆம் ஆண்டிற்கான பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைத் துணிகள் இதுவரை தங்கள் பாடசாலைகளுக்கு கிடைக்கவில்லையெனில் தமக்கு அறிவிக்குமாறு அனைத்து பாடசாலை அதிபர்களிடமும் கல்வி அமைச்சு இன்று கோரியுள்ளது.

அனைத்துப் பாடசாலைகளுக்கும் விநியோகிப்பதற்காக பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைத் துணிகள் நாட்டிலுள்ள பிரதேசக் கல்வி அலுவலகங்கள் ஊடாக அனைத்து அரச பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது.

பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் கிடைக்கப்பெறாத

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

பாடசாலைகளின் அதிபர்களை பின்வரும் தொலைபேசி, தொலைநகல் அல்லது மின்னஞ்சல் ஊடாக உடனடியாக அறிவிக்குமாறு கல்வி அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

பாடப் புத்தகங்களுக்காக தொலைபேசி- 0112784815/ 0112785306 பக்ஸ்: 0112784815 ஈமெயில்: epddistribution2024 @gmail.com

சீருடைகள் தொலைபேசி: 0112785573 பக்ஸ்- 0112785573 ஈமெயில்: schoolsupplymoe@ gmail.com. (அ)

# குழந்தைகளின் வானில் கெஹலிய ஏறியது ஏன்?

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 20

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பெண் கைதிகளின் குழந்தைகளை ஏற்றிச் செல்வதற்காக யுனிசெப் வழங்கிய பஸ மூலம் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பெண் கைதிகளின் குழந்தைகளின் நலனுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் என யுனிசெப் நிபந்தனை விதித்துள்ள போதிலும், சிறைச்சாலை அதிகாரிகள் ரம்புக்வெலவின் போக்குவரத்துக்கு இந்த பஸ்ஸை பயன்படுத்தியதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

ரம்புக்வெலவுடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஏனையோர் சிறைச்சாலை பஸ்ஸில் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், ரம்புக்வெலவுக்கு ஏன் இவ்வாறான விசேட சலுகை வழங்கப்பட்டது என கேள்வி எழுப்பப்படுகிறது. (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் 30 வயது பெண் சிக்கினார்!

கொழும்பு, மார்ச் 20

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த 30 வயது பெண்ணொருவர் களனி பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் 25 கிராம் 820 மில்லிகிராம் நிறையுடைய ஐஸ் போதைப் பொருள், இலத்திரனியல் தராசு மற்றும் 2 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆஸி. பாதுகாப்பு அதிகாரிகள் குழு யாழ்.பல்கலைக்கழகத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் தேசிய பாதுகாப்புக் கல்லூரி, அவுஸ்திரேலிய வெளியுறவு மற்றும் வாணிபத்துறை அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டது.

இலங்கையில் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் தேசிய பாதுகாப்புக் கல்லூரி, அவுஸ்திரேலிய வெளியுறவு மற்றும் வாணிபத்துறை ஆகியன இணைந்து மேற்கொண்டுள்ள கடல்சார் வள மற்றும் கடலோரப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுத் திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கும், அவுஸ்திரேலிய அரசின் உதவிகள் வழங்கப்படக்கூடிய இடங்களை அடையாளங்காணும் வகையிலும், கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்தின் அரசியல் மற்றும பொருளாதாரத்துக்கான முதல் செயலாளர் கலாநிதி போல் செக்கோலா தலைமையிலான குழுவினரே கடந்த வாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையிலான குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.



இந்தச் சந்திப்பின் போது அவுஸ்திரேலிய அதிகாரிகள் குழுவில், தென் ஆசிய மற்றும் இந்து சமுத்திரக் கடற் பிராந்தியப் பாதுகாப்புசார் விற்பன்னரும், அவுஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழக தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளருமான கலாநிதி டேவிற் பிரேஸ்டர், ரோயல் அவுஸ்திரேலிய கடற்படையின் ஓய்வு பெற்ற அதிகாரியும், புதுடில்லியில் கடமையாற்றும் அவுஸ்திரேலிய பாதுகாப்பு ஆலோசகருமான கப்டன் சைமன் பேட்மன், கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலய பாதுகாப்பு ஆலோசகர் கேணல் அமெண்டா ஜோண்சன் மற்றும் அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அத்தியட்சகர் வனேசா ரஃப் ஆகியார் அடங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில், கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் மற்றும் பொருளியல் துறைத் தலைவர் கலாநிதி திருமதி கே. கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமைகள் மற்றும் ஆஸ்திரேலிய அரசின் நலனோம்புத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், சட்ட விரோத புலம்பெயர்வு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான சமூக மட்டச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. (அ)

# ஊதா முகக் குரங்குகள் அழியும் அபாய நிலைமை

கொழும்பு, மார்ச் 20

நகர சுற்றுப்புறங்களில் காடழிப்பு காரணமாக, ஊதா முகம் கொண்ட இலைக் குரங்கு என்றும் அழைக்கப்படும் மேற்கத்திய ஊதா முகமுடைய லங்கர்கள் நாய்கள், மக்கள் மற்றும் வாகன விபத்துகளில் சிக்கிக் கொள்ளும் நிலையுள்ளதால் அவை உணவு தேடுகையில், ஓய்வெடுக்கும் இடங்களில் பாதுகாப்புகளைப் பெற வேண்டிய கட்டாத்திற்கு தள்ளப்பட்டுள்ளன என சூழலியல் நிபுணர் பேராசிரியர் வொல்ப்கங் டிட்டஸ் தெரிவித்தார்.

தலங்கம ஏரிக்கு அருகில் ஊதா நிற முகமுடைய மூன்று லங்கர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும், அதன் விளைவாக இரண்டு விலங்குகள் காயங்களுக்கு உள்ளாகியதாகவும் சமூக ஊடகங்களில் சமீபத்தில் வெளியான பதிவில் தெரியவந்துள்ளது.

நிபுணர் பேராசிரியர் வொல்ப்கங் டிட்டஸ் பேசுகையில்,

ஊதா நிற முகமுடைய லங்கூர் மரங்களில் வாழக்கூடிய தன்மையுடையவை என்றும், மரங்களை அகற்றுவதன் மூலம் அவற்றின் பாதைகள் தடைப்படும் போது மட்டுமே அவை தரைக்கு வரும் என்றும் கூறினார்.

இந்த பின்னணியில்தான் நகர்ப்புறங்களில் உள்ள மக்கள் இப்போது ஊதா நிற முகமுள்ள லங்கர்களை ஒரு பாதிப்பு ஏற்படுத்தும் பூச்சியாக உணர்கிறார்கள்.

மேற்கத்திய ஊதா முகம் கொண்ட லங்கூர் என்பது தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பாதுகாப்பு ஆணையின் பிரிவு 30இன் கீழ் பாதுகாக்கப்பட்ட ஒரு இனமாகும். இது சர்வதேச அளவில் ஆபத்தான அழியும் நிலையில் உள்ள ஒரு விலங்கினமாகும். (அ)

# அரபிக் கடலில் மீன் பிடிக்கவேண்டாம்!

கொழும்பு, மார்ச் 20

கடந்த சனிக்கிழமை அரபிக் கடலில் சோமாலிய ஆயுதக் குழுவொன்றினால் ஈரானிய மீன்பிடி படகு ஒன்று கடத்தப்பட்டதை தொடர்ந்து, அரபிக் கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களம் இலங்கை மீனவர்களுக்கு அறிவித்துள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த இதனை தெரிவித்தார்.

ஈரானிய கப்பலுடன் குறித்த கடற்பரப்பிற்கு கடற்கொள்ளையர் குழுவொன்று வந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

## வெடுக்குநாறி அடக்குமுறை...

பல்கலைக்கழகத்தின் நுழைவாயில் முன்பாக வீதியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில், “வார்த்தைகளில் வேண்டாம் நல்லிணக்கம்”, “திட்டமிட்ட கைதுகளை உடன் நிறுத்து”, “மண் துறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா,?”, “புத்தர் சின்னம் ஆக்கிரமிப்பின் கருவியா”, “குருந்தூர்மலை எங்கள் சொத்து”, “பண்பாட்டு படுகொலையை உடன் நிறுத்து”, போன்ற கோஷங்களை எழுப்பினர்.

## வெடுக்குநாறி மலையில்...

நேற்று வவுனியா நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. வழக்கில், பொலிஸார் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை.

கைதானவர்கள் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகள் “கைது செய்தபின்னர் பொலிஸார் குற்றத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்”, சுட்டிக்காட்டினர்.

இதையடுத்து, வழக்கை தள்ளுபடி செய்த நீதிவான். கைதான அனைவரையும் விடுதலை செய்து உத்தரவு பிறப்பித்தார்.

இந்த வழக்கில் ஆலய நிர்வாகம் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகளான என். சிறீகாந்தா, அன்ரன் புனிதநாயகம், அருள், க. சுகாஸ் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (ஐ)

## மாகாண...

எம். ஏ. சுமந்திரன் சபையில் உரையாற்றுகிறாரா அல்லது பிரதேச சபையில் உரையாற்றுகிறாரா ? என்பதை அறியவில்லை. உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை சுட்டிக்காட்டி உரையாற்றினார். அவரது உரையில் விரக்தி மாத்திரமே எதிரொலித்தன.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் இவர் சபையில் உரையாற்றுகையில் “உயர்நீதிமன்றம் வீட்டுக்கு செல்ல வேண்டும் “ என்று இவர் குறிப்பிட்டார். இவர்களுக்கு சார்பான தீர்ப்பு கிடைக்கும் போது சபைக்கு வந்து உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அப்பால்பட்டு செல்ல கூடாது என்று குறிப்பிடுகிறார். ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு.

இதன்போது எழுந்து ஒழுங்கு பிரச்னையை எழுப்பிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் “உயர்நீதிமன்றத்தின் குறைநிறைகளைச் சுட்டிக்காட்டும் உரிமை எமக்கு உண்டு. அன்று குறிப்பிட்ட விடயத்துக்கும்,இன்று குறிப்பிடும் விடயத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் உண்டு. நான் அன்று குறிப்பிட்ட கருத்தில் எவ்வித மாறுபாடும் கிடையாது - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய நீதி அமைச்சர், மாகாண சபைத் தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. சிறந்த சட்ட வரைவை நாங்கள் தயார் செய்து முன்வைத்தோம். உயர்நீதி மன்றத்தின் திருத்தங்கள் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் இந்த செயல்பாடு களுக்கு நான் எதிர்ப்பு தெரிவித்தேன்.

மாகாண சபைத் தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் பிரயோகித்தார். இதனால் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டு மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது. இதற்கு எம். ஏ. சுமந்திரன் பொறுப்புக் கூற வேண்டும். ஆகவே, நீங்கள்தான் (சுமந்திரனை நோக்கி) நீங்கள் தான் அப்போதைய பிரதமருக்கு கடும் அழுத்தம் பிரயோகித்தீர்கள்.

இதன்போது மீண்டும் குறுக்கிட்டு உரையாற்றிய சுமந்திரன், “நான் எதிர்க்கட்சி உறுப்பினர் நீங்கள்தான் அமைச்சரவை உறுப்பினர். ஆகவே நீங்களே பொறுப்புக் கூற வேண்டும்” - என்றார்.

நான் அமைச்சரவையில் இருந்தேன். சிறந்த சட்ட மூலத்தையே பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தோம்.சட்டமூலம் குழுநிலை வேளையில் திருத்தம் செய்யப்பட்ட போது உயர்நீதிமன்றத்தின் தீர்மானங்கள் கவனத்திற் கொள்ளவில்லை. இவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதால் மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது.சிக்கலை நீங்களே (சுமந்திரனை நோக்கி) ஏற்படுத்தினீர்கள் - என்றார். (ஐ)

## தமிழ்த்...

சந்திப்பு இன்று புதன்கிழமை நண்பகல் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறும் என அவர் ஏனைய எம்.பிக்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

அநேகமாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு எம்.பிக்களும்கூட இதில் பங்குபற்றக்கூடும்.

(அ)

## கோப்...

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், ஐக்கிய மக்கள் சக்தியின் ஹேஷா விதானகே, எஸ். எம். மரிக்கார், சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் காமினி வலேபொட, சரித ஹேரத், சிறீலங்கா சுதந்திர கட்சியின் தயாசிறி ஜயசேகர ஆகியோர் நேற்றைய தினம் தமது பதவிகளைத் துறந்தனர்.

முன்னதாக எரான் விக்ரமரத்ன நேற்று முன்தினம் கோப் குழுவிலிருந்து விலகினார். இதைத் தொடர்ந்தே நேற்று 6 எம். பிக்கள் பதவி விலகினர். இவர்கள் தமது பதவி விலகல் கடிதங்களை சபாநாயகரிடம் கையளித்துள்ளனர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (ஐ)

## விசாரணை...

வவுனியா, வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று, வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டமை மற்றும் அது தொடர்பில், 8 பேர் கைது செய்யப்பட்டமையை கண்டித்து, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றில் நேற்று எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இதனால் சபையில் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஆதரவு வழங்கியிருந்தார்.

குறித்த விடயம் தொடர்பில் கருத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சிவராத்திரி தினத்தில் வழிபாட்டு நிகழ்வுகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதுடன், கைது நடவடிக்கைகள் இடம்பெற்றமை தொடர்பில், தாம் கவலையடைவதாக தெரிவித்தார்.

கோவிலுக்குள் வழிபாடுகளில் ஈடுபட்டதாக எவரையும் கைது செய்ய முடியாது.

எனவே இந்த விடயம் தொடர்பில், விரிவான விசாரணை அவசியமாகும்.

சகல மதங்களுக்கும், மதச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அந்த சுதந்திரம் வடக்குக்கு ஒன்றாகவும், தெற்குக்கு ஒன்றாகவும் இருக்கக் கூடாது என சஜித் பிரேமதாச தெரிவித்தார். (அ)

# சகலரும் ஏற்கக்கூடிய தலைமை இன்று தமிழ் சமூகத்தில் இல்லை!

## ஐங்கரநேசன் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 20

தமிழ் சமூகத்தை வழிநடத்த தீர்க்கத் தரிசனமும் ஆளுமையும் கொண்ட எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தேசியத் தலைமை இன்று இல்லாமையால் சகல துறைகளுமே தகுந்த தலைமைத்துவங்கள் இன்றித் தள்ளாடுகின்றன என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கிப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறந்த தலைமைத்துவ பண்பின் வெளிப்பாடு தொடர்ச்சியாக தலைமைப் பதவிகளில் அமர்வது அல்ல. உரிய நேரத்தில் தலைமை வகிபாகத்தை பொருத்தமான இன்னொருவரிடம் கையளிப்பதுதான் தலைமைத்துவ பண்புகளில் மிகவும் உயர்வானது.

மற்றையவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கும் உயரிய இந்தத் தலைமைத்துவப் பண்பு மாணவர்களிடம் உள்ளது. ஆனால், அத்தியாவசியமான இந்தப் பண்பு இன்றைய எமது அரசியல் தலைவர்களிடம் அறவே இல்லை.

தமிழ்ச் சமூகத்தை வழிநடத்த தீர்க்க தரிசனமும் ஆளுமையும் கொண்ட, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தேசியத் தலைமை இன்று இல்லை. சகல துறைகளுமே தகுந்த தலைமைத்துவங்கள் இன்றித் தள்ளாடுகின்றன.

பல்லுப்போய் சொல்லுப்போனாலும் தானே இன்றும் சிறந்த பாட்டுக்காரன் என்பது போலத் தள்ளாத வயதிலும் தலைமைக் கதிரையில் நிரந்தரமாக அமரவே எமது தலைவர்கள் ஆசைப்படுகின்றார்கள்.

அந்தக் கதிரையை எட்டுவதற்குப் போட்டாபோட்டிகள் இடம்பெறுகின்றன. இந்தத் தலைமைத்துவச் சீரழிவே மேலிருந்து கீழாகச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் இன்று நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் காரணமாக உள்ளது.

மாணவர் சமூகம் குறித்துப் போதைப் பொருள் பாவனை உட்படப் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனாலும், இன்றைய மாணவர்களிடமிருந்துதான் நாளைய எமது தலைவர்கள் உருவாக வேண்டும். அந்த நம்பிக்கை இன்னும் பட்டுப்போகவில்லை - என்று கூறினார். (ஐ)

## வடக்கில்...

ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் வெப்பநிலை தற்போது உள்ளதை விடவும் உயர்வாக இருக்கும் - நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வடக்கு மாகாணத்தில் சராசரி வெப்பநிலை 31 பாகை செல்சியஸாகவும் அதி கூடிய வெப்பநிலை 36 பாகை செல்சியஸாகவும் உணரக்கூடிய வெப்பநிலை 34 பாகை செல்சியஸாகவும் பதிவானது. இந்த நிலைமை அடுத்து வரும் நாட்களில் இன்னமும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் சராசரி ஆவியாக்க அளவு 11 மி. மீ. ஆகும். சில இடங்களில் சராசரியை விட மிக உயர்வாகப் பதிவாகியுள்ளது. எனவே, ஒருநாளின் ஆவியாக்க அளவே, 11 மி.மீ. என்றால் ஒரு மாதத்தின் 30 நாளுக்கான ஆவியாக்க அளவு 330 மி. மீ. ஆகும்.

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இதுவரை ஒரு மி. மீ. மழை கூடக் கிடைக்கவில்லை. எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரையிலான தினங்களில் வெப்ப சலன செயல்பாட்டால் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைவிட, மார்ச் 28 முதல் ஏப்ரல் 8 வரை வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு சற்று கனமான மழைக்கு வாய்ப்புள்ளது.

கடும் வெப்பநிலையால் ஏற்படும் கடுமையான ஆவியாக்கம் எமது தரை மேற்பரப்பு மற்றும் தரைக் கீழ் நீர்நிலைகளின் நீரின் அளவை கணிசமான அளவு குறைக்கும். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தரைக்கீழ் நீரின் அளவு சடுதியாகக் குறைவடைந்து செல்கிறது. செப்ரெம்பர் மாதத்தின் பின்னரே தரைக்கீழ் நீரை மீள்நிரப்பக்கூடிய கனமழை கிடைக்க வாய்ப்பு உண்டு. எனவே, தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் - தேவையற்ற தண்ணீர் விரயத்தை முற்றிலும் நிறுத்த வேண்டும் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## ரூ.300...

படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 299.29 ரூபாயாகவும் விற்பனை விலை 308.90 ரூபாயாகவும் பதிவானது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

## பாராளுமன்ற...

தமிழ் எம்.பிக்கள் வலியுறுத்தினர்.

தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் தவறான குற்றச்சாட்டின் பேரில் எட்டு பேரும் கைது செய்யப்பட்டதாக தமிழ் எம்.பிக்கள் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பில் ஆராயவுள்ளதாக பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்நிலையில் எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அனைத்து மக்களுக்கும் அந்தந்த மதங்களைக் கடைப்பிடிக்கும் உரிமை இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

நீதிமன்றில் உள்ள விடயங்களில் அரசாங்கம் தலையிட முடியாது என தெரிவித்த நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச, இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

“பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டவர்களை எங்களால் விடுவிக்க முடியாது. அவர்கள் நீதிமன்றத்தால் மட்டுமே விடுவிக்கப்பட வேண்டும்,” என்று அவர் கூறினார். (அ)

## இந்திய...

சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று காலை 9:30 மணிக்கு மருதடி சந்தியில் இருந்து பேரணியாக யாழ். இந்திய துணைத் தூதரகம் நோக்கி சென்ற மீனவர்கள் துணைத் தூதரகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பின்னர் பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றியதை அடுத்து யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடவே முடியாது!

## மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 20

**ஜனாதிபதித் தேர்தலை எந்தக் காரணத்துக்காகவும் பிற்போட முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த வேண்டும்.

நாட்டில் தற்போது இடைக்கால ஜனாதிபதியின் ஆட்சியே தொடர்கின்றது.

இடைக்கால ஜனாதிபதி ஒருவருக்கு ஒரு வருடம் மாத்திரம் வழங்கப்பட்டால் போதுமானது. தற்போது இந்த காலஎல்லை கடந்துள்ளது.

தற்போதைய பாராளுமன்றுக்கும் மக்கள் ஆணை இல்லை. எனவே புதிய ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

பாராளுமன்றம் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியன புதுப்பிக்கப்பட வேண்டும். இந்த வருட இறுதிக்குள் இவற்றை பூர்த்தி செய்ய வேண்டும்.

அதேபோல் பாராளுமன்ற தேர்தலை அடுத்தவருடம் நடத்த முடியும் - என்றார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலே முதலில்!

கொழும்பு, மார்ச் 20

முதலில் பொதுத் தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா நடத்தப்படும் என்ற சந்தேகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

எனவே ஜனாதிபதி தேர்தலுக்கு முதலில் தயாராகுமாறு நேற்று முன் தினம் கூடிய அமைச்சரவைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தவேண்டும் எனவும், அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கு இந்தியாவிடமிருந்து 61 மில். டொலர்!

## அமைச்சர் நிமலிடம் கூறினார் தூதுவர்

கொழும்பு, மார்ச் 20

காங்கேசன்துறை துறைமுகத்தை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு 61.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் துறைமுகங்கள், கப்பல்துறை, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இடையிலான சந்திப்பொன்று அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாரிய அளவிலான கப்பல்கள் மற்றும் படகுகள் உள்நுழைவதற்கு ஏற்ற வகையில் துறைமுகம் 30 மீட்டர் ஆழப்படுத்தப்படவுள்ளதுடன், புதிய அலைதாங்கியை நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் அதிக அளவிலான இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்துவரவும் இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்திய சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 600 மில்லியன் ரூபா செலவில் காங்கேசன்துறை துறைமுகத்தில் புதிய பயணிகள் முனையம் நிர்மாணிக்கப்பட்டதாகவும் கடந்த 9 மாதங்களில் பாரிய அளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, இந்தியா வழங்கவுள்ள 61.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை பயன்படுத்தி, காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதுவரிடம் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# ஓ. எல். பரீட்சை மே 6இல் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 20

2023ஆம் கல்வி ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சை அட்டவணையை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் மே 6ஆம் திகதி தொடக்கம் மே 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற தேர்தல் :

# அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு அனுமதி

கொழும்பு, மார்ச் 20

பாராளுமன்ற தேர்தல் முறைமையை மாற்றுவதற்கான அரசியலமைப்பு திருத்தத்தை மேற்கொள்வதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ குறித்த யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

இதற்காக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சித் தலைவர்கள் மற்றும் ஏனைய தரப்பினரின் கருத்துகளைக் கேட்டறிந்த பின்னர் அமைச்சரவைக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்காக அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 160 பேரை தொகுதிவாரி முறையில் குறித்த தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்காளர்களின் ஊடாக நேரடியாக தேர்ந்தெடுப்பதற்கும் எஞ்சிய 65 பேரை விகிதாசார முறையில் தேசிய ரீதியில் அல்லது மாகாண ரீதியில் தேர்ந்தெடுக்கவும் பெரும்பான்மையானோர் அந்த குழுவிற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு இதனை சட்டமூலமாக்குவதற்காக சட்டவரைஞர்களுக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# புதிய 200 மதுபானச்சாலைகளுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் திட்டம்

கொழும்பு, மார்ச் 20

200 மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 15 பேருக்கு ஏற்கனவே 2 கோடி ரூபாய் கப்பமாக பெறப்பட்டு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு விட்டன. இது தேர்தலை இலக்காகக்கொண்டு பணம் சேகரிப்பதான செயல்பாடா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ். எல். உரிமம் 4 இன் கீழ் 200 மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளன. அதில் 15 பேருக்கு ஏற்கனவே இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு விட்டன. இதற்காக 2 கோடி ரூபாய் கப்பமாக அறவிடப்பட்டுள்ளது. தற்போது 6 மதுபான உற்பத்தி சாலை அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதனை கருத்தில்கொண்டே மது வரி ஆணையாளராக குணசிறி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். தேர்தலை இலக்காகக்கொண்டு பணம் சேகரிப்பதான செயல்பாடா இது என்ற சந்தேகம் எழுவதால் இதன் உண்மைத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும்.

நாட்டின் 41 இலட்சம் பாடசாலை மாணவர்களின் நலனை கருதியே இது சம்பந்தமாக கேள்வி எழுப்புகிறேன். சிறப்புரிமைகளுக்கு உட்பட்டு நான் பொய்யான விடயங்களை முன்வைக்கவில்லை - சொல்வதை பொறுப்புடன் சொல்கிறேன்.

இந்த சட்டவிரோத உரிமப் பத்திரங்கள் அனைத்தும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் திரும்பப் பெறப்படும். இது தொடர்பான விரிவான விசாரணை தேவை - என்றும் கூறினார். (ஐ)

# பாடசாலை மாணவர்களிடையே பாலியல் கல்வி அதிகரிக்க திட்டம்!

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, மார்ச் 20



பாடசாலை மாணவர்களின் பாலியல் கல்வியை அதிகரிக்க பல வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக பாடசாலை நூலகங்களுக்கு மேலதிகமாக 4 வாசிப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் புத்தகங்கள் இ-தக்சலாவ இணையத்தளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

# சம்பளத்தை உயர்த்தும் அதிகாரம் இலங்கை மத்திய வங்கிக்கு இல்லை!

## நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, மார்ச் 20

அரசமைப்பின் பிரகாரம் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு மத்திய வங்கிக்கு அதிகாரம் இல்லை. அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பு நடவடிக்கை தவறானது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் பிரகாரம் பொது நிதி தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மத்திய வங்கி தனது ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது.

புதிய மத்திய வங்கி சட்டத்தின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்க தமக்கு சுதந்திரம் இருப்பதாக தெரிவிக்கும் மத்திய வங்கியின் கூற்று தவறானது எனவும் எந்தவொரு சட்டமும் அரசமைப்பின் கீழ் வர வேண்டும்.

அரசியல் தலையீடுகள் இன்றி செயல்படுவதை உறுதி செய்வதற்காகவே புதிய மத்திய வங்கி சட்டத்தின் கீழ் மத்திய வங்கிக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப மத்திய வங்கி செயல்படும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். துரதிர்ஷ்டவசமாக மத்திய வங்கி முதலில் தனது ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கவே செய்துள்ளது - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தேர்தல் பத்திரம்:
# திமுக, அதிமுக போல பாஜகவும், காங்கிரசும் நன்கொடையாளர்கள் பெயரை குறிப்பிடாதது ஏன்?

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடைகளை வழங்குவதற்காக வ்கியில் வாங்கப்பட்ட தேர்தல் பத்திரங்கள் தொடர்பாக அரசியல் கட்சிகளிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களை இந்திய தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 17) பதிவேற்றம் செய்தது.

தேர்தல் பத்திரங்கள் குறித்த வழக்கு விசாரணையின் போது, அனைத்து அரசியல் கட்சிகளிடமிருந்தும் தேர்தல் பத்திரங்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்குமாறு தேர்தல் ஆணையத்திடம் உச்ச நீதிமன்றம் கூறியிருந்தது.

அதன்படி, தேர்தல் பத்திரங்களை வாங்கியவர்கள் யார், அதன் மதிப்பு என்ன, எந்த வங்கிக் கணக்குக்கு அது அனுப்பப்பட்டது, அந்த பத்திரங்கள் எப்போது பணமாக்கப்பட்டன என்பன போன்ற தகவல்களை அரசியல் கட்சிகளிடம் இருந்து தேர்தல் ஆணையம் பெற வேண்டும்.

தேர்தல் ஆணையம் 2018-ம் ஆண்டு தேர்தல் பத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து செப்டம்பர் 2023 வரை இந்தத் தகவல்களை உச்ச நீதிமன்றத்தில் சீலிடப்பட்ட உறையில் சமர்ப்பித்திருந்தது. இந்த தகவல்களை தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.

தங்களுக்கு யார் எத்தனை ரூபாய் மதிப்பிலான தேர்தல் பத்திரங்களை வழங்கினர், அதனை தாங்கள் எப்போது பணமாக பெற்றோம் என்ற முழுமையான தகவல்களை சில கட்சிகள் சமர்ப்பித்துள்ள நிலையில், பல கட்சிகள் எந்தெந்த பத்திரத்தில் இருந்து எவ்வளவு பணம் பெற்றனர் என்பதை மட்டும் தெரிவித்துள்ளனர்.

### கட்சிகள் அளித்த தகவல்கள் என்ன?

முக்கிய அரசியல் கட்சிகளில், அதிமுக, திமுக, மத சார்பற்ற ஜனதா தளம் ஆகிய கட்சிகள் தேர்தல் பத்திரங்கள் மூலம் தங்களுக்கு யார் நன்கொடை அளித்தனர் என்பது குறித்த தகவல்களை அளித்துள்ளனர்.

சிக்கிம் ஜனநாயக முன்னணி மற்றும் மகாராஷ்டிரவாதி கோமந்தக் கட்சி போன்ற ஒப்பீட்டளவில் சிறிய கட்சிகள் தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்ற நன்கொடைகளை எங்கிருந்து பெற்றன என்று கூறியுள்ளன.

அதேசமயம், ஆம் ஆத்மி, சமாஜ்வாதி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் மற்றும் ஜம்மு காஷ்மீரின் தேசிய மாநாட்டுக் கட்சி ஆகிய கட்சிகள் 2019ஆம் ஆண்டு வரை நன்கொடை அளித்தவர்களின் விவரங்களை மட்டும் அளித்துள்ளன. நவம்பர் 2023 இல் இந்த கட்சிகள் புதுப்பிக்கப்பட்ட தகவல்களை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்தபோது, நன்கொடையாளர்கள் பற்றிய தகவலை தெரிவிக்கவில்லை.

இவை தவிர, பெரும்பாலான கட்சிகள் நன்கொடை அளித்தவர்கள் குறித்து தகவல் தரவில்லை.

தேர்தல் பத்திரங்களின் மதிப்பு மற்றும் அவை எப்போது பணமாக்கப்பட்டன என்பதை மட்டும் அக்கட்சிகள் கூறியுள்ளன. மேலும், சில இடங்களில் தேர்தல் பத்திரங்கள் வாங்கப்பட்ட தேதியையும் அதனை தாங்கள் பெற்ற தேதியையும் அக்கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளிப்பவர்களின் பெயர்களை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்காத கட்சிகளில் பாஜக மற்றும் காங்கிரஸ் கட்சிகளும் அடங்கும்.

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளித்தவர்கள் மற்றும் அவர்களிடமிருந்து பெறப்பட்ட தொகை குறித்த தகவல்களை சேகரிக்குமாறு தேர்தல் ஆணையத்திடம் 2019 ஏப்ரலில் உச்ச நீதிமன்றம் கூறியது.




அப்போது பல ஆய்வாளர்கள், இந்த உத்தரவு தேர்தல் பத்திரங்கள் தொடர்பான முழுமையான தகவல்களை வழங்காது என்றும், இவை "தாங்கி" பத்திரங்கள் (அதாவது அதற்கு பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் இல்லை) என்பதால் அவற்றை வாங்கியது யார் என்பது குறித்த தகவல் அதில் குறிப்பிடப்பட்டிருக்காது என்றும் கூறினர்.

இந்த சூழ்நிலையில், எந்த தேர்தல் பத்திரத்தை யார் வழங்கியது என்று தெரியவில்லை என எந்தவொரு கட்சியும் கூறலாம் என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

நிபுணர்களின் இந்த வாதம், கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களில் பிரதிபலிக்கிறது.

மேற்கு வங்கத்தில் ஆளும் அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் 2019 இல் அளித்த பதிலில், இந்த பத்திரங்கள் "தாங்கி" பத்திரங்கள் என்றும் அதனை வாங்கியவர்களின் தகவல்கள் அவற்றில் அச்சிடப்படவில்லை என்றும் கூறியது.

இந்த பத்திரங்கள் அக்கட்சியின் அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட்டதாகவோ அல்லது அங்கு வைக்கப்பட்டிருந்த பெட்டிகளில் போடப்பட்டதாகவோ அல்லது தங்கள் கட்சியை ஆதரிப்பவர்கள் பெயர்களை வெளியிட விரும்பாத நிலையில், வேறு யாராவது மூலமாக அனுப்பியதாகவோ திரிணாமுல் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற சூழ்நிலையில், "இந்த பத்திரங்களை வாங்கியவர்கள் குறித்த தகவல் எங்களிடம் இல்லை" என்று திரிணாமுல் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மேலும், "தேர்தல் பத்திரங்களை வெளியிடும் அதிகாரம் கொண்டதும், அவற்றை ஏற்றுக்கொண்டு டெபாசிட் செய்யும் வங்கியுமான பாரத ஸ்டேட் வங்கி அத்தகைய தகவல்களை வைத்திருக்கலாம்" என்றும் அக்கட்சி கூறியது.

### பாஜகவும் காங்கிரஸும் சொன்னது என்ன?

பாரதிய ஜனதா கட்சி 2023 இல் அளித்த பதிலில், அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவது தொடர்பான பல்வேறு சட்டங்களில் உள்ள விதிகளை மேற்கோள் காட்டியது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, அரசியல் கட்சிகள் ஒவ்வொரு ஆண்டும் தேர்தல் பத்திரங்கள் மூலம் பெறப்பட்ட தொகையின் விவரங்களை மட்டுமே பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும், அந்த பத்திரங்கள் எங்கிருந்து பெறப்பட்டன என்ற தகவலை அல்ல என்றும் பாஜக கூறியுள்ளது.




வருமான வரிச் சட்டத்தின் கீழ் இவ்வளவு தகவல்களை மட்டுமே தர வேண்டும் என்றும் பாஜக கூறியுள்ளது. தேர்தல் பத்திரங்களை வழங்கியவர்களின் பெயர்கள் மற்றும் இதர தகவல்களை வைத்திருக்க வேண்டிய அவசியம், இச்சட்டத்தின் கீழ் கட்சிக்கு இல்லை என்றும், எனவே அந்த விவரங்கள் தன்னிடம் இல்லை என்றும் பாஜக கூறியது.

ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகளும் தேர்தல் பத்திரங்களை நன்கொடையாக வழங்கியவர்கள் குறித்து தகவல் தெரிவிக்காததற்கு இதே காரணத்தைக் கூறியுள்ளன.

காங்கிரஸ், பிஜூ ஜனதா தளம் போன்ற கட்சிகள் தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளித்தவர்கள் பற்றிய தகவல்களைத் தர முடியாததற்கு தெளிவான காரணம் எதுவும் தெரிவிக்கவில்லை.

இக்கட்சிகள் தேர்தல் பத்திரங்களை எப்போது பணமாக்கினார்கள், அவர்களின் கணக்கில் எவ்வளவு தொகை வந்தது என்பதை மட்டுமே தெரிவித்துள்ளன.

### லாட்டரி உரிமையாளர் மார்ட்டினிடம் ரூ.509 கோடி பெற்ற திமுக

தேர்தல் பத்திரம் தொடர்பான மேலும் அதிக விவரங்கள் வெளியாகியுள்ளன. இதில், பாஜக, காங்கிரஸ், திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகள் எவ்வளவு நிதி பெற்றுள்ளன, எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து நிதி பெற்றன என்ற தகவல்கள் தெரியவந்துள்ளன. பாஜக சமர்ப்பித்துள்ள ஆவணங்களின்படி, அந்தக் கட்சி தேர்தல் பத்திரம் மூலம் மார்ச் 3, 2017 முதல் ஜூலை 10, 2023 வரை ரூ.6,987 கோடி ரூபாய் நிதி பெற்றுள்ளது தெரியவந்துள்ளது. மற்ற கட்சிகள் தாக்கல் செய்த ஆவணங்களில் கூறப்பட்டிப்பது என்ன?

தேர்தல் பத்திரம் தொடர்பான விவரங்களை இந்தியத் தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 14ஆம் தேதி வெளியிட்டிருந்த நிலையில், இன்று மேலும் கூடுதல் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஏப்ரல் 12, 2019-ல் உச்சநீதிமன்ற இடைக்கால உத்தரவை அடுத்து, அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரம் மூலம் பெறப்பட்ட நிதி தொடர்பான விவரங்களை சீலிட்ட உறையில் வழங்கின. அவை உறை திறக்கப்படாமலே உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. மார்ச் 15ஆம் தேதி தேர்தல் பத்திரம் தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த உத்தரவை அடுத்து, நீதிமன்ற பதிவுத்துறை அந்த ஆவணங்கள் மற்றும் அதன் டிஜிட்டல் பதிவுகளை எங்களிடம் வழங்கியது. அந்த ஆவணங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன" எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புதிய தரவுகளில் ஒரு கட்சிக்கு எந்த ஸ்டேட் வங்கி கிளையில் இருந்து எந்தத் தேதியில் தேர்தல் பத்திரம் நன்கொடையாக வழங்கப்பட்டது என்பது உள்ளிட்ட விவரங்கள் அடங்கியுள்ளன.

### திமுக எவ்வளவு நிதி பெற்றது?

தமிழ்நாட்டின் ஆளுங்கட்சியான திமுக தேர்தல் பத்திரம் மூலமாக ரூ. 656.5 கோடி பெற்றுள்ளது.

இதில் பெருந்தொகையை லாட்டரி அதிபர் மார்ட்டினுக்குச் சொந்தமான ஃப்யூச்சர் கேமிங் நிறுவனமே வழங்கியுள்ளது.

2019 முதல் நவம்பர் 14, 2023 வரை பல்வேறு கட்டங்களாக இந்த நிறுவனம் ரூ.509 கோடியை திமுகவிற்கு வழங்கி உள்ளது. உச்சபட்சமாக 2021 - 2022 நிதியாண்டில் ரூ. 249 கோடியை இந்த நிறுவனம் வழங்கி உள்ளது.

### அதிமுக எவ்வளவு நிதி பெற்றது?

தமிழ்நாட்டின் எதிர்க்கட்சியான அதிமுக தேர்தல் பத்திரம் மூலம் ரூ.6.05 கோடி நிதி பெற்றுள்ளது. இது ஏப்ரல் 2, 2019 முதல் நவம்பர் 10, 2023 வரை பெறப்பட்ட தொகை. இதில் ரூ.5 கோடியை சென்னை சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட் அணி நிர்வாகமே வழங்கியுள்ளது.

லாட்டரி அதிபர் மார்ட்டினுக்குச் சொந்தமான ப்யூச்சர் கேமிங் நிறுவனத்திடம் இருந்து ரூ.509 கோடி ரூபாய் நன்கொடை பெற்றதற்காக, திமுக கடும் விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. அந்த வகையில், அதிமுக பொதுச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், "நிர்வாகத் திறனற்ற திமுக ஆட்சியில் ஆன்லைன் ரம்மி தடைச் சட்டம் குறித்து பெயரளவில் மட்டும் நடவடிக்கைகள் எடுப்பதுபோல காட்டிவிட்டு, வலுவில்லாத சட்டத்தை இயற்றி, மறுபுறம் மக்களின் உயிரையே பணயம் வைக்கும் சூதாட்ட நிறுவனத்திடம் பணம் பெற்றிருப்பது வெட்கக்கேடானது" என தெரிவித்துள்ளார்.

# எடப்பாடி பழனிச்சாமி வலுவான - கூட்டணியை அமைப்பதில் சறுக்கிவிட்டாரா?

# போட்டியில் அதிமுகவை முந்துகிறதா பாஜக?

சுபாஷ் சந்திர போஸ்

இந்தியாவில் 18வது நாடாளுமன்ற தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டு தேசிய, மாநில அரசியல் கட்சிகள் மும்முரமாக தேர்தல் பணியில் இறங்கி விட்டன. இதில் தமிழ்நாட்டிற்கு முதற்கட்டமாக ஏப்ரல் 19ஆம் தேதி வாக்குப்பதிவு என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான வேட்புமனு தாக்கல் மார்ச் 20ஆம் தேதி முதல் தொடங்குகிறது.

இந்நிலையில் தமிழகத்தின் பிரதான கட்சியும், ஆளுங்கட்சியுமான திமுக தனது கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீட்டையே முடித்து வேட்பாளர்களையே அறிவிக்கும் நிலைக்கு சென்று விட்டது. ஆனால், எதிர்க்கட்சியும் மற்றுமொரு பிரதான கட்சியுமான அதிமுக இன்னும் கூட்டணி கட்சிகளை முடிவு செய்வதிலேயே இழுபறி நீடித்து வருகிறது.

தேர்தல் தேதி அறிவித்த பிறகும் அதிமுக கூட்டணி குறித்து முடிவு எடுக்கப்படாதது ஏன்? அதிமுக பலவீனமடைந்துள்ளதா? இந்த தேர்தலில் அதிமுகவின் உத்தி என்ன?

### தேர்தல் கூட்டணி

தமிழ்நாட்டின் ஆளுங்கட்சியான திமுக கூட்டணியில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மதிமுக, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, இந்திய முஸ்லீம் லீக் மற்றும் மக்கள் நீதி மய்யம் ஆகிய கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இவற்றிற்கான தொகுதி பங்கீடுகளும் முடிந்து தமிழ்நாடு-புதுச்சேரி நாடாளுமன்ற தொகுதிகளில் திமுக 21 தொகுதிகளில் போட்டியிடுகிறது. மீதமுள்ள 19 தொகுதிகளில் கூட்டணி கட்சிகள் போட்டியிடுகின்றன.

இந்நிலையில் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சியான அதிமுக இதுவரை எந்தெந்த கட்சிகளுடன் கூட்டணி வைக்கப்போகிறோம் என்பதையே வெளியிடாமல் இருக்கின்றது.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் அதிமுக கூட்டணி பா.ஜ.க., பாட்டாளி மக்கள் கட்சி, புதிய நீதிக் கட்சி, புதிய தமிழகம், தமிழ்மாநில காங்கிரஸ், தேமுதிக மற்றும் இதர சிறுகட்சிகளும் இடம்பெற்றிருந்தன.

அதே போல் 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் அதிமுக, பாஜக, பாமக, தமிழ்மாநில காங்கிரஸ், புதிய பாரதம் மற்றும் இதர சிறு கட்சிகள் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தன.

ஆனால், சமீபத்தில் பாஜக - அதிமுகவுக்கு இடையிலான கூட்டணி முடிவுக்கு வந்ததாக அதிமுக அறிவித்தது அதிமுக. இதனைத் தொடர்ந்து 2024 தேர்தலில் பழைய கூட்டணி நீடிக்குமா என்ற கேள்வி நிலவி வந்தது.

அதற்கு பதிலளிக்கும் வண்ணம் இதுவரை அதிமுக கூட்டணி முடிவாகாமல் இருக்கிறது. தமிழக பாஜகவை பொறுத்தவரை அதிமுகவுடன் கூட்டணி வைப்பதில் பெரிய ஆர்வம் காட்டுவது போல் தெரியவில்லை. ஆனால், பாஜகவின் தேசிய தலைவர்கள் இன்னமும் கூட்டணிக்கான கதவுகள் திறந்திருப்பதாகவே பேசி வருகின்றனர்.



அதே சமயம் தேமுதிக 40 தொகுதிகளுக்கும் விருப்ப மனு அளிக்குமாறு தனது தொண்டர்களுக்கு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அவர்களுக்கும் அதிமுகவுக்குமான கூட்டணி பேச்சுவார்த்தையும் ஒரு முடிவுக்கு வந்த பாடில்லை.

ஆனால், பாமகவும் அதிமுகவும் தொடர்ந்து பேச்சு



வார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. பாமக சட்டமன்ற உறுப்பினர் அருள் ஞாயிறன்று அதிமுக தலைவர் எடப்பாடி பழனிச்சாமியை சந்தித்து பேசியுள்ளார்.

### அதிமுக - பாமக பேச்சுவார்த்தை

கடந்த ஒரு மாதமாகவே அதிமுக - பாமக இடையே கூட்டணி பேச்சுவார்த்தை நடந்து வருவதாக அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டது. இதில் பாமக 10 தொகுதிகள் கேட்பதாக கூறப்பட்டது. ஆனால், இந்த பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்பட்டது போல் தெரியவில்லை.

இந்நிலையில் பாமக சட்டமன்ற உறுப்பினர் அருள், எடப்பாடிபழனிச்சாமியை சந்தித்து பேசியுள்ளது முக்கிய நகர்வாக பார்க்கப்படுகிறது. இதில் அதிமுக தரப்பில் 7 மக்களவை தொகுதிகளும், 1 மாநிலங்களவை தொகுதியும் தர இசைவு தெரிவித்துள்ளதாக அதிமுக வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஆனால், இதுகுறித்து இரண்டு கட்சிகளை சேர்ந்த தலைவர்களும் அதிகாரபூர்வ அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை.

வேட்புமனு தாக்கல் செய்ய இன்னும் ஓரிரு தினங்களே உள்ள நிலையில் இதுவரை கூட்டணி குறித்து அதிமுக தீர்க்கமான முடிவெடுக்காமல் இருப்பது அக்கட்சிக்கு இத்தேர்தலில் பின்னடைவை ஏற்படுத்த வாய்ப்புள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

### "40 தொகுதிகளிலும் வெல்லும் அதிமுக"

ஆனால், அதிமுக தனித்து நின்றாலும் சரி, கூட்டணி கட்சிகளோடு தேர்தலை சந்தித்தாலும் சரி 40 தொகுதிகளிலும் வெற்றிபெறும் என்று உறுதியாக கூறுகிறார்



எழுப்புகிறார்.

"இவர்கள் இருவருக்குள்ளும் ஏதோ தொடர்பு இருக்குமோ, ஒரு வேளை திமுகவுக்கு எதிராக சிறுபான்மையினர் வாக்குகளை பிரிக்க பாஜகவே அதிமுகவை திட்டமிட்டு செயல்பட வைக்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. ஆனால், சிஏஏ ஆதரவு போன்ற விஷயங்கள் சிறுபான்மையின மக்கள் மத்தியில் அதிமுகவுக்கு பின்னடைவு கொடுத்திருக்கிறது என்பதே கள எதார்த்தம்" என்று கூறுகிறார் பிரியன்.

இதற்கு காரணமாக, இந்த தேர்தலில் அதிமுக தோற்றுவிட்டால் அடுத்த 2026 தேர்தலிலும் பலவீனம் அடைந்துவிடும். அப்போது கட்சி தலைமையே எடப்பாடியிடம் இருக்குமா என்று தெரியாது. எனவே கடந்த தேர்தலை விட இந்த தேர்தல் அதிமுகவுக்கு முக்கியம் என்று கூறுகிறார் அவர்.

### "திமுகவே பி டீம்"

அதிமுக-பாஜக தனித்து நிற்பது பாஜகவின் திட்டமாக இருக்குமோ என்று பிரியன் எழுப்பும் சந்தேகத்திற்கு மறுப்பு தெரிவிக்கும் ஜெயக்குமார் திமுகவே பாஜகவின் பி டீம் என்று குற்றம் சாட்டுகிறார்.

"சிஏஏ சட்டத்திற்கு வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் பிள்ளையார் சுழி போட்டதே திமுகதான். ஆனால், நாங்கள் பூர்வ இஸ்லாமியர்களுக்கு எந்த தீங்கும் ஏற்படக் கூடாது என்றே அன்றும், இன்றும் கூறி வருகிறோம். சிறுபான்மையின மக்களின் ஆதரவு எங்களுக்கே உண்டு. எனவே இதுபோன்ற வதந்திகள் தோல்வி பயத்தில் திமுகவை சேர்ந்தவர்கள் பரப்பி விடும் மலிவான அரசியல்" என்று அழுத்தமாக கூறுகிறார் ஜெயக்குமார்.

ஆனால், "சிஏஏ ஆதரவு போன்ற பல்வேறு நிலைப்பாடுகளை எடுத்த அதிமுகவுக்கு கண்டிப்பாக சிறுபான்மையின மக்கள் வாக்கு செலுத்த மாட்டார்கள். திமுகவின் கூட்டணி உறுதியாக இருக்கிறது. எனவே கண்டிப்பாக 40 தொகுதிகளிலும் அது வெற்றி பெரும். குறிப்பாக தமிழக முதல்வரின் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் எங்களுக்கு வெற்றியை வாங்கித்தரும்" என்று உறுதியாக கூறுகிறார் திமுக எம்பி வில்சன்.

இது பாஜகவின் திட்டம்தானா என்ற கேள்விக்கு பதிலளித்த அக்கட்சியின் மாநிலத் துணைத்தலைவர் நாராயணன் திருப்பதி, இதெல்லாம் அரசியல் முதிர்ச்சியற்ற, அனுபவமற்றவர்களின் கருத்து என்று ஒரே வரியில் தெரிவித்துவிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், "தேர்தல் கால கூட்டணியை பொறுத்தவரை மற்ற கட்சிகளை போல ஒரு கட்சியை சார்ந்து இருக்கும் கட்சியல்ல பாஜக. தேர்தல் அரசியல் என்று வரும்போது ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்பதே எங்களது இலக்கு. அந்த வகையில் மோடி அவர்களின் தலைமையை ஏற்று, பாஜகவின் கொள்கையை ஏற்றுக்கொண்டு யார் கூட்டணிக்கு வருகிறார்களோ அவர்களை நாங்கள் இணைத்துக் கொள்வோம்" என்று கூறினார்.



### மக்களவை தேர்தல் நிலைப்பாடு

பொதுவாகவே மக்களவை தேர்தல் என்பது மத்தியில் அமையப்போகும் ஆட்சியை நிர்ணயிக்கும் தேர்தல் என்பதால், தேசிய கட்சிகளை சுற்றி களத்தின் சூழல் அமைவது இயல்பான ஒன்று. பல மாநில கட்சிகள் இந்த தேர்தலில் பங்கேற்றாலும், இறுதியில் தேசிய கட்சிகளுக்கான ஆதரவு என்ற புள்ளியில் ஒன்றிணைவதை பார்த்திருக்கிறோம்.

(16ம் பக்கம் பார்க்க)

# எடப்பாடி பழனிச்சாமி வலுவான -...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இந்தமுறை மாநிலம் சார்ந்த கோரிக்கைகளோடு களம் இறங்கியுள்ளது அதிமுக. 2014ஆம் ஆண்டும் கூட மறைந்த முன்னாள் அதிமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா தலைமையில் அதிமுக தமிழ் நாட்டில் தனித்தே நின்றது.

இந்தியா முழுவதும் மோடி அலை என்று தீவிரமாக பேசப்பட்டு வந்த நிலையில், தமிழ்நாட்டில் “மோடியா இல்லை இந்த லேடியா” என்ற முழக்கத்தை முன்வைத்து தேர்தலை சந்தித்தார் ஜெயலலிதா. இந்த முறையும் தேசிய கட்சி எதற்கும் ஆதரவு தெரிவிக்காமல் அதிமுக மக்களவை தேர்தலை சந்திக்கிறது.

இதில் தங்களது நிலைப்பாடு குறித்து பேசிய ஜெயக்குமார், “இத்தனை ஆண்டுகளாக தேசிய கட்சிகள் எதையும் செய்யவில்லை. அதே போல் திமுகவை சேர்ந்த எந்த நாடாளுமன்ற உறுப்பினரும் எதையும் சாதிக்கவில்லை. ஆனால், 2014ஆம் ஆண்டு அம்மா தலைமையில் போட்டியிட்டு வென்ற 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல முறை நாடாளுமன்றத்தையே முடக்கியுள்ளனர். எனவே இந்த முறையும் 40 தொகுதிகளிலும் வெற்றிபெற்று தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவோம்” என்று கூறுகிறார்.

ஆனால், இந்தமுறை ஜெயலலிதா அளவிற்கான வீரியமான எதிர்ப்பு குரல் எதையும் காணமுடியவில்லை என்றே கூறுகிறார்கள் மூத்த பத்திரிகையாளர்கள்.

### “விமர்சிக்க தயங்கும் எடப்பாடி பழனிச்சாமி”

இதுகுறித்து பேசிய பிரியன், பல்வேறு காரணங்களால் எடப்பாடி பழனிச்சாமி மோடியை தீவிரமாக எதிர்க்காமல் தவிர்த்து வருவதாக குறிப்பிடுகிறார்.

“ஆட்சியில் இருந்தபோது பாஜகவோடு கூட்டணி வைத்து தேர்தலை சந்தித்தார்கள். இப்போது அவர்களது தயவு தேவையில்லை என காட்ட நினைக்கிறார்கள். ஆனால், அதிமுகவினர் பாஜகவையோ அல்லது பாஜக தலைவர்களையோ தீவிரமாக விமர்சனம் செய்ய மறுக்கிறார்கள்.” என்கிறார் பிரியன்.

ஆனால், “ எங்களுடைய பிரதான எதிரி திமுக. பாஜகவை பொறுத்தவரை தமிழ்நாட்டில் அந்த கட்சியை பெரிய விஷயமாகவே நாங்கள் நினைக்கவில்லை. இதனால், திமுகவை நாங்கள் எதிர்க்கிறோம். பாஜக தமிழ் நாட்டில் இல்லவே இல்லை என்பதால் அவர்கள் குறித்து



பேசுவதில்லை” என்று கூறுகிறார் ஜெயக்குமார்.

### தேர்தல் களம் திமுக - பாஜக என்று மாறுகிறதா?

நீண்டகால தமிழ்நாடு அரசியல் பாரம்பரியத்தின் படி, திமுக - அதிமுக ஆகிய கட்சிகளே அனைத்து தேர்தல்களின் நாயகர்களாக இருந்துள்ளனர். ஆனால், இந்த முறை திமுக - பாஜக என்ற நேரடி போட்டி நிலவுதாக அரசியல் வட்டாரம் தெரிவிக்கின்றது.

2019இல் இருந்து பாஜக - அதிமுக கூட்டணி தொடர்ந்து வந்தாலும் கூட தன்னை பிரதான எதிர்க்கட்சியாக காட்டிக்கொள்ள பாஜக எங்குமே தயங்கியதில்லை. உண்மையான சட்டமன்ற எதிர்க்கட்சியான அதிமுக எதிர்க்கட்சி இருந்தபோதிலும் கூட, தங்களையே எதிர்க்கட்சி என்று பாஜக பதிவு செய்து வந்துள்ளது.

இந்நிலையில் 2024 மக்களவை தேர்தல் களத்திலும் அதிமுகவை முந்துகிறதா பாஜக என்ற கேள்வியை முன்வைத்தோம்.

இதற்கு பதிலளித்த பிரியன், “நமக்கு பிடிக்கிதோ இல்லையோ தேர்தல் களம் திமுக - பாஜக என்று மாறக் காரணம் இது மக்களவை தேர்தல். திமுகவும், பாஜகவும் தான் எதிர் எதிர் சித்தாந்தங்கள் கொண்ட கட்சிகள், இவர்களுக்குள் தான் மாறிமாறி மோதல் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது.”

“நடக்கப்போவது பிரதமரை தேர்வு செய்யும் தேர்தல் என்பதால் இவைதான் களத்தின் பிரதான போட்டியாளர்களாக மாறுகின்றனர். ஆனால், எடப்பாடி மையக்கருத்தை விட்டு வெளியே நிற்கிறார். அவர் இன்னமும் திமுகவை எதிர்க்கும் புள்ளியில் நிற்கிறாரே தவிர, பாஜகவை விமர்சிக்கத் தயங்குகிறார். இதுவே அவரை களத்தில் மூன்றாவது இடத்திற்கு தள்ளி விடுகிறது” என்று கூறுகிறார்.

### அதிமுக கூட்டணி இழுபறிக்கு காரணம்?

மார்ச் 20 வேட்புமனு தாக்கல் தொடங்க உள்ள நிலையில் இன்னமும் அதிமுக கூட்டணி ஒரு முடிவுக்கு வரவில்லை. அதிமுகவின் வேட்பாளர் தேர்வும் எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை.

தமிழ்நாட்டின் பிரதான கட்சிகள் பலவும் திமுக கூட்டணியில் ஏற்கனவே இணைந்து விட்ட நிலையில் எடப்பாடி பழனிச்சாமி முன்பு எதிர்பார்த்தது போல் காங்கிரஸ் போன்ற கட்சிகள் அதிமுகவுடன் சேரவில்லை. இந்நிலையில் பாமகவுடனான பேச்சுவார்த்தை மட்டும் இன்னும் நடந்து வருவதாக கூறப்படுகிறது.

இதற்கு காரணமாக, அதிமுக தோற்று விடுவோம் என்று தெரிந்ததால் மட்டுமே இன்னமும் கூட்டணி குறித்து முடிவு செய்யாமல் இருக்கிறார்கள். அவர்களிடம் வேட்பாளர் கூட இருக்கிறார்களா என்று தெரியவில்லை என்று கூறுகிறார் வில்சன்.

2019ஆம் ஆண்டு தேர்தலிலும் கூட இதே போன்றதொரு இழுபறியே நிலவியது. ஆனால், அப்போது அதிமுகவில் இரட்டை தலைமை இருந்தது. இந்த முறையோ முடிவெடுக்கும் அதிகாரத்தில் எடப்பாடி பழனிச்சாமி இருந்தும் கூட்டணி பேச்சுவார்த்தை இழுபறியில் இருப்பது ஏன் என்ற கேள்வியை முன்வைத்தோம். இதற்கு பாஜகவும் அதிமுகவும் பிரிந்ததே காரணம் என்று கூறுகிறார் பிரியன்.

